பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை (21.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 174

# ஐரோப்பிய ஒன்றியத் தலையீடு தீர்வு முயற்சிக்குப் பெரும் தடை

## பக்கச்சார்பான முடிவு என பாலா விசனம்



லண்டன்,மே 21

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை கடுமையாகத் தண்டிக்கும் விதத்திலும் மோசமாகக் குற்றம் சுமத்தும் வகையிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருப்பது அநீதியானது; சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமற்றது; முற்றும் முழுதாய் பக்கச் சார்பானது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தலையீடானது இலங்கைப் பிணக்குக்கு நீதியான - நிலைத்து நிற்கக்கூடிய - ஒரு தீர்வைக் காண்பதற்குப் பெரும் தடையாக முளைத்திருக்கின்றது"

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் பேச்சுக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்வதற்கு எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் நகர்வுகள் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வன்முறைகள் வெடித்தமைக்கும் பேச்சு முயற்சிகள் ஸ்தம்பித்தமைக்கும் புலிகளைக் குற்றம் சுமத்திக் குறைகூறும் இந்தத் தீர்மானம், மறுபுறத்தில் அரச பயங்கரவாதம் மற்றும் அப்பாவித் தமிழ் பொதுமக்களின் படுகொலைகளுக்குக் காரணமாக அமைந்து, அதன் மூலம் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிப்பதற்குத் தடையாக இருக்கும் உண்மைக் குற்றவாளியான ராஜபக்ஷ நிர்வாகத்தைப் பாராட்டி, அதன் தவறுகளைக் கவனியாமல் விட்டிருக்கின்றது."

- என்று ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் தீர்மானத்தை விமர்சித்தார் பாலசிங்கம்.

"அந்தப் பிரேரணை நிச்சயமாக ஒரு பக்கச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலால் ஏ-9 பயணத்தில் நேற்றுத் தடங்கல்

வடமராட்சி,மே 21

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலால் முகமாலை ஊடான ஏ-9 பாதைப் போக்குவரத்து நேற்றுக்காலை 8.45 மணிமுதல் 9.15 மணிவரை மூடப்பட்டது.

நாகர்கோவில் முன்னரங்க நிலைப் பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு 10.30 மணியளவிலும், நேற்றுக்காலை 7.30 மணியளவிலும் படையினர் தமது நிலைகளை நோக்கி ஷெல் மற்றும் டாங்கி தாக்குதல்களை நடத்தினர் என்றும் - தாம் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் - விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, வரணி கறுக்காய் பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தினர் இதன்போது பலர் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (173-190)

## கொழும்பில் ஐ.தே.க முன்னணி

கொழும்பு,மே 21

நேற்று நடைபெற்ற 20 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் நேற்றிரவு 10 மணிவரையான நிலைவரப்படி கொழும்பு மாநகராட்சியில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பு சுயேச்சைக் குழு முன்னணியில் இருந்தது. காலி நகர சபையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அதிக வாக்குகளைப் பெற்றிருந்தது.

கொழும்பு மாநகராட்சிக்கான தேர்தலில் ஐ.தே.க. சமர்ப்பித்த வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்டதும் -

இதனால் சுயேச்சைக் குழுவின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர் பட்டியலில் உள்ளோர் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டமையும் தெரிந்தவையே.

## அமெரிக்க அரசின் அழுத்தத்துக்கு அடிபணிந்தது ஐரோப்பிய ஒன்றியம்!

கொழும்பு,மே21

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்கும் விவகாரத்தில் அமெரிக்க அழுத்தத்துக்கு அடிபணிந்தது மேற்குலகம்."

- இவ்வாறு மேற்குலக இராஜதந்திரிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

"விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தடை விதிப்பது சமாதான முயற்சிகளுக்கு உதவப்போவதில்லை. அது எதிர்மறைவான விளைவுகளையே ஏற்படுத்தும். மீண்டும் முழு அளவிலான போர் வெடிக்க அது வழி செய்யும் என்றே இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகளில் அனுசரணைப் பணி வகித்துவரும் நோர்வே கருதுகின்றது. நோர்வேயின் இந்த நிலைப்பாட்டை ஏனைய ஸ்கண்டிநேவிய நாடுகளான சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகியனவும் முழு அளவில் ஏற்றிருந்தன. ஆனால், புலிகளைத் தடைசெய்யவேண்டும் என்பதில் அமெரிக்கத் தரப்பு தீவிரமாக இருந்தது. அமெரிக்கா சார்பில் பிரிட்டன் மேற்படி சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய ஸ்கண்டிநேவிய நாடுகளுடன் இராஜதந்திரப் பேச்சுக்களை நடத்தி - 'அழுத்தம் போட்டு - அந்த நாடுகளை மசிய வைத்தது. அந்த நாடுகள் இணங்கியதோடு புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிப்பதில் இருந்த முட்டுக்கட்டை முழுமையாக நீக்கப்பட்டுவிட்டது" என்று ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

"புலிகளைத் தடைசெய்யவேண்டும் என்ற அமெரிக்க வற்புறுத்தலே இவ்விடயத்தில் தீர்மானிக்கும் அம்சமாக அமைந்தது" - என்றும் அவர் சொன்னார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை நடவடிக்கை மோசமான விளைவை ஏற்படுத்தும்

### கண்காணிப்புக்குழுத் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு,மே21

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடை நடவடிக்கை மோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் எச்சரித்துள்ளார்

'டைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் விடுதலைப் புலிகள் மீதான தடை சரியான நேரத்தில் வருவதாக நான் எண்ணவில்லை. இத்தடை நடைமுறைப்படுத்தப்பட்டால் அனைத்துத் தரப்புகளாலும் தாம் கைவிடப்பட்டோம் என்று விடுதலைப் புலிகள் எண்ணுவார்கள். அத்துடன், முழு அளவிலான கெரில்லா யுத்தமொன்றை மேற்கொள்வதைத்தவிர அவர்களுக்கு வேறு வழியிருக்காது. அவர்கள் கொழும்பை இலக்குவைப்பார்கள். அதனால் முதலீட்டாளர்கள், உல்லாசப்பயணிகள், வசதிபடைத்தவர்கள் நாட்டைவிட்டு [illegible] நிலைமை உருவாகும் என்று தெரிவித்துள்ளார் கண்காணிப்புக்குழுத் தலைவர்.

புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை குறித்த பிரேரணை ஐரோப்பிய ஒன்றிய அமைச்சர்களின் ஒப்புதலுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரிலிருந்து இராமேஸ்வரம் சென்ற அகதிகள் படகு க்விழ்ந்ததில் ஐந்து பேர் பலி; 9 பேர் மீட்பு!

கொழும்பு,மே 21

மன்னாரிலிருந்து இராமேஸ்வரம் நோக்கி அகதிகளை ஏற்றிச்சென்ற படகு ஒன்று கவிழ்ந்ததில் 5பேர் பலியாகினர்; மேலும் 5 பேரைக் காணவில்லை.

நேற்று அதிகாலை தலைமன்னார்ப் பகுதியிலிருந்து பன்னிரண்டுக்கும் மேற்பட்ட படகுகள் சுமார் 75 அகதிகளை ஏற்றிக்கொண்டு இராமேஸ்வரம் நோக்கிச் சென்றன. அவற்றில் ஒரு படகே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகலில் 19பேர் படகொன்றில் தமிழகத்துக்குப் புறப்பட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டி மக்கள் நேற்று தீவகத்தைவிட்டு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம்,மே21

அல்லைப்பிட்டி மக்கள் நேற்றுக் காலை முதல் தீவகத்தைவிட்டு இடம்பெயரத் தொடங்கினர்.


தீவகப் படுகொலைகளையடுத்து அச்சத்தால் அல்லைப்பிட்டி மக்கள் அங்குள்ள தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். இவர்களுக்கு உரிய [illegible] ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் ரெர்க்ஸி பொலீஸாருக்கும், கடற்படையினருக்கும் பணிப்புரை விடுத்திருந்தார். ஆனால், அவர்களுக்கு பாதுகாப்பளிக்கமுடியாத சூழ்நிலையில் தாங்கள் உள்ளனர் என்று கடற்படையினரும் பொலீஸாரும் நீதிவானிடம் விளக்கமளித்தனர்.

[illegible] அம்மக்கள் பாதுகாப்புக் கருதி தீவகத்தை விட்டு வெளியேற பாதுகாப்பு வழங்குமாறு கடற்படையினருக்கும், பொலீஸாருக்கும் நீதிவான் உத்தரவிட்டிருந்தார். இதன்படி நேற்றுக்காலை முதல் அல்லைப்பிட்டி மக்கள் யாழ்ப்பாணம் நோக்கி இடம்பெயர ஆரம்பித்தனர்.

முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





தீவகப் படுகொலைகளையடுத்து பிலிப்பு நேரியார் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த அல்லைப்பிட்டி மக்கள் நேற்று அங்கிருந்து பாதுகாப்பான இடம்நோக்கி இடம்பெயர்ந்தனர்.

இதன்போது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் முன்னேற்பாடுகள் குறித்து அரசசார்பற்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதையும் இடம்பெயர்ந்த மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வழித்துணை வழங்குவதையும் முதலிரண்டு படங்களில் காணலாம்.

கிடைத்த வாகனங்களில் படகு, கோழிக்கூடு உட்பட தமது வாழ்வாதாரங்களை ஏற்றிக்கொண்டு அல்லைப்பிட்டி மக்கள் இடம்பெயர்வதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்: தமிழினியன்)*

# எமது பாதுகாப்பை நாங்களே உறுதிப்படுத்தவேண்டிய நிலை கொலைகளின் பின்னரான சூழல் இதனையே உணர்த்துகிறது

## அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பஸ்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே21

தமிழ் மக்களாகிய நாமே எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய சூழல் உருவாகியுள்ளது. அல்லைப்பிட்டி படுகொலையும், அதன் பின்னரான அபாயகரமான சூழலும் இதனை உணர்த்துகின்றன.

இப்படித் தெரிவித்தார் அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து வன்னி செல்லும் குடும்பஸ்தர் ஒருவர்.

நேற்றுக்காலை முதல் அல்லைப்பிட்டியில் இருந்து குடும்பங்கள் திரள்திரளாக இடம் பெயர ஆரம்பித்தன. வாகனங்களில் தமது பெட்டி படுக்கைகளுடன் இடம்பெயர் ந்த குடும்பங்களை யாழ்.பண்ணைப் பகுதி யில் வைத்து 'உதயன்' செய்தியாளர்கள் செவ்வி கண்டனர். இதன் போதே மேற்படி குடும்பஸ்தர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அண்மையில் அல்லைப்பிட்டியில் நடைபெற்ற படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்ட முறையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கொலைக்குப் பின்னணியில் யார் உள்ளார்கள் என்பது அல்லைப்பிட்டி மக்கள் அனைவருக்கும் தெரியும். ஆயினும் அவர்கள் அதை வெளிப்படுத்தினால் அவர்களது உயிருக்கு உத்தரவாதமளிப்பது யார்?

அல்லைப்பிட்டி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலீஸாருக்கும் கடற்படைக்கும் நீதிவான் உத்தரவிட்டிருந்தார். ஆனால், எமக்கு எந்தவிதமான பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. அந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டில் எமக்கு நம்பிக்கையும் இல்லை.

அல்லைப்பிட்டியில் இருந்து இடம் பெயர்ந்த பெரும்பாலான மக்கள் வன்னிக்குச் செல்வதற்கே தீர்மானித்துள்ளனர். முழுக் குடும்பங்களும் இடம்பெயர்ந்துவிட்டன. அன்று நடந்த படுகொலையின் பின்னர் எமது மக்களின் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. படுகொலைக்குப் பின்னரும் எமது மக்கள் பல்வேறு வழிகளில் அச்சுறுத் தப்பட்டுள்ளனர். கொலைகளைப்பற்றி பேசக் கூடாதென அப்பகுதியில் உள்ள அரச படைகள் எமது மக்களுக்குத் தெரிவித்துள்ளன.

இந்தப் படுகொலைகளுக்குப் பின்னரும் நாம் அங்கு வசிப்பது மடைத்தனமானது. மீண்டும் இப்படியொரு சம்பவம் நடைபெறாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

எமக் கான பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்த வேண்டிய சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள் ளது. எனவே வன்னிக்குச் செல்வதே சரியான தென நாம் தீர்மானித்துள்ளோம். அதன்படி அங்கு செல்லவுள்ளோம். இராணுவ நெருக்குவாரங்களிலிருந்து விடுபட்டு சுதந் திரமாக வாழ்வதற்கு வன்னியே சிறந்த இடம் - என்றார் அவர்.

இந்த இடப்பெயர்வு தொடர்பாக மூதாட்டி ஒருவர் கூறுகையில்,

நாம் தான் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தோம் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்றது என்றால் படுகொலை செய்யப்பட்ட அந்தப் பச்சிளம் பாலகர்கள் யாருக்கு ஆதரவாக இருந்தார்கள். மனிதாபிமானம் என்பதை அறியாத உயிர்களின் பெறுமதிபுரியாத காடையர்கள் இந்தக் கொலைகளைப் புரிந்திருக்கிறார்கள். எம்முடன் நட்பாகப்பழகுவது போல நடித்த கடற்படையினர் தான் இந்தக் கொலைகளின் சூத்திரதாரிகள். இப்போது எதுவுமே தெரியாத அப்பாவிகள் போல அல்லைப்பிட்டிச் சந்தியில் நின்று அவர்கள் எம்மைப் பார்க்கிறார்கள். இந்தக் கொலைகளுக்கான பதில் அவர்களுக்கு விரைவில் கிடைக்கும் என நான் நம்புகிறேன்.

அல்லைப்பிட்டியிலிருந்து முழுக்குடும்பங்களும் இடம்பெயர்ந்து விட்டன. இனி அங்கு வசிப்பது பாதுகாப்பானதல்ல-என்றார் அவர்.

## மாவட்டமட்டத்திலான பெருவிளையாட்டுப்போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே21

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுக்கள் மற்றும் உள்ளக விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம் திகதிமுதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

15, 17,19 வயதுப் பிரிவினருக்கான கரபந்தாட்டப் போட்டிகள் (ஆண்கள்) எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் முற்பகல் 8 மணிமுதல் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

அதேபோல் 19 வயதுப்பிரிவு ஆண், பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 5 மணிவரையும் -

15, 17வ வயதுப் பிரிவினருக்கான கரபந்தாட்டப் போட்டிகள் (பெண்கள்) எதிர்வரும் 27ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 5.30 மணிவரை திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

15, 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் 5 மணிவரையும் -

15, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்திலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## யூனியன் கல்லூரி மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,மே21

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்விபயிலும் தரம் 7,8,9,10,11 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களை நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

## தீவகத்துக்கு செய்திசேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் இருவர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,மே21


அல்லைப்பிட்டிப் பிரதேசத்திற்கு நேற்றுச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இருவர் பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அல்லைப்பிட்டிப் பிரதேச மக்கள் அச்சம் காரணமாக நேற்றையதினம் அங்கிருந்து இடம்பெயர்ந்தனர். இதுதொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களில் இருவர் பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கெதிராக இலங்கை அரசு மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து தென்னாபிரிக்காவின் பிரிடோரியா நகரில் உள்ள ஐ.நா அலுவலகம் முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தென்னாபிரிக்கத் தமிழர் கூட்டமைப்பு, ஐ;ஊமதிக்கும் நீதிக்குமான திராவிடர் அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. தென்னாபிரிக்காவுக்கான ஐ.நா. தூதரக அதிகாரியிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## தமக்கான பாதுகாப்பைத் தமிழர்கள் தாங்களே தேடிக்கொள்ளவேண்டும்

தென்னிலங்கை அரசின் அடக்குமுறை ஆட்சி அதிகாரத்தைத் தமிழர் தாயகத்தில் வலோற்காரமாகத் திணித்து, நிலைநிறுத்தும் நடவடிக்கைகளின் முக்கிய அம்சமாக தமிழர் பிரதேசம் எங்கும் அரச படைகள் பெருமளவில் வியாபித்து நிற்கின்றன. அப்படைகளுக்கு 'பாதுகாப்புப் படைகள்' என்று திருநாமம்.

உண்மையில் அந்தப் படைகளால் யாருக்குப் பாதுகாப்பு அல்லது அந்தப் படைகளுக்கு யார் பாதுகாப்பு என்ற கேள்விகள்தான் யாழ்.குடாநாட்டு நிலைமைகளை அவதானிக்கும் மக்கள் மனதில் எழுகின்றன.

யாழ்.தீவகத்தில் சீருடையினர் மற்றும் அவர்களோடு சேர்ந்து செயற்படும் ஒட்டுப்படையினரால் அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வெறியாட்டத்தில் தப்பிப் பிழைத்து அல்லைப்பிட்டித் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கும் அந்தப் படுகொலைகள் பற்றிய மரண விசாரணைகளின் போது சாட்சியமளித்தவர்களுக்கும் அக்கொடூரத் தாக்குதல்களில் காயங்களுடன் தப்பிப் பிழைத்து யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கும்படி பொலீஸாரையும் தீவகத்தில் பரந்து நிலைகொண்டிருக்கும் கடற்படையினரையும் நீதிமன்றம் பணித்தது.

திருடனைத் தலையணியாக்கியமை போன்ற - பாலுக்குப் பூனையைக் காவல் வைத்தமை போன்ற - நடவடிக்கைதான் இது. கொலைச் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படுபவர்களைக் கொண்டே கொலைச் சாட்சிகளைப் பாதுகாக்க முயலும் நடவடிக்கை இது என்றாலும் இலங்கைச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் இதுதான் ஒரேவழி என்பதால் இதைத்தான் நாடவேண்டியிருந்தது.

ஆனால், அந்தப் பாதுகாப்பைக்கூட வழங்குவதற்கு இயலாது என பொலீஸும் கடற்படையும் நீதிமன்றுக்கே கைவிரித்துவிட்டனர்.

இப்போது, தமது உயிரைப் பாதுகாப்பதற்காக அப்பிரதேசத்தில் இருந்து இருநூறுக்கும் அதிகமான குடும்பங்கள் வெளியேறிவிட்டன.

ஓரிரு கொடூரத் தாக்குதல்கள் மூலம் - சுமார் 13 அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்து, இன்னும் சிலரைப் படுகாயப்படுத்தி, அந்தப் பகுதியிலிருந்து பொதுமக்களை 'வெற்றிகரமாக' துடைத்து வெளியேற்றி, அப்பிரதேசத்தைப் 'பாதுகாப்பாக விடுவித்து' சாதனை புரிந்திருக்கின்றது அரசுத் தரப்பு.

யாழ்.குடாநாட்டில் மூன்றில் ஒருபங்கு நிலப் பூமியை உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்துக் கபளீகரம் செய்து நிற்கின்றன இலங்கை அரசுப் படைகள்.

தோட்டங்களும், வயல்களும், காணிகளும் உருவாக்கி தமது உழவுத் தொழில் மூலம் தமது சமூத்தை உயர்த்தியவர்கள் தமிழர்கள். வளம் கொழிக்கும் அவர்களின் விவசாயப் பூமியில் பெரும் பகுதி இன்று ஆக்கிரமிப்பு வலயங்களுக்குள் சிக்குண்டு காடாகித் தரிசு நிலங்களாகிச் சீரழிந்து கிடக்கின்றன. தமது செழிப்பான மண்ணுக்குச் செல்வதற்குக்கூட உரிமையில்லாது விரட்டியடிக்கப்பட்ட மக்கள் - தமிழ் விவசாயக் குடும்பங்கள் - இன்னும் அகதி முகாம்களிலும் நலன்புரி மையங்களிலும் வாழ்வுக்கு வழியின்றி - வருமானமின்றி - வதைபட்டு வாடுகின்றன.

தமிழர்களின் சுய உற்பத்திப் பொருளாதாரத்தில் கடல் அன்னைக்கு சிறப்பான இடமுண்டு. இலங்கைத் தீவின் கடலோரத்தின் மூன்றில் இரு பங்கு தமிழர் தாயகத்தில்தான் உள்ளது. ஆனால், கடலில் இறங்குவதற்குத் தமிழ் மீனவர்களுக்கு ஏகக் கெடுபிடிக் கட்டுப்பாடு; அச்சுறுத்தல்கள். தமது உயிர்வாழ்வுக்குப் பிரதான மையமான கடற்கரையோரங்களில் இருந்து தமிழ் மீனவக் குடும்பங்கள் - ஏன் அந்த மீனவ சமுதாயமே - அடியோடு விரட்டப்பட்டு நகர்த்தப்பட்டுவிட்டன.

இந்த அநியாயங்கள் எல்லாமே பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புக்கு என்ற பெயரில்தான் அரங்கேறி வருகின்றன.

மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய படையினர் அதைச் செய்யவே முடியாது என்று கைவிரிக்க, அதன் காரணமாகப் பாதுகாப்புத் தேடி வேறு இடங்களுக்கு மக்கள் இடம்பெயர்வது ஒருபுறம் நடக்கின்றது.

மறுபுறம், பாதுகாப்புப் படையினருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக மக்கள் தத்தமது வாழ்விடங்களிலிருந்து அடியோடு விரட்டப்படுவது அரங்கேறுகின்றது.

தமக்கென்ற பாதுகாப்பைத் தமிழர்கள் தாங்களே ஏற்படுத்தி, அதை உறுதிப்படுத்தும் வரை மக்களை வதைக்கும் இந்தக் கொடூரங்களை எதிர்கொண்டு தவிர்ப்பது இயலாத காரியம். அதுவே தமிழர்களின் புட்டூறிவுப் பாடமாகும்.

# வடக்கு - கிழக்கு மாகாண அரச சேவையில் சுகாதார முகாமைத்துவ உதவிச் சேவை

## பொதுச் சேவை ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது

யாழ்ப்பாணம்,மே21

வடக்கு - கிழக்கு மாகாண அரச சேவையில் சுகாதார முகாமைத்துவ உதவிச் சேவையை அமைப்பதற்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் எல்.சி.எஸ்.சிறிவர்த்தன இதுகுறித்து மாகாணத்தில் உள்ள சகல பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மாகாணத்தில் இயங்கும் சகல பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் திணைக்களம், சகல சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பணிமனை, மாகாண நிர்வாகத்திற்குட்பட்ட சகல வைத்திய சாலைகள், மாகாணத்தில் இயங்கும் மாகாண நிர்வாகத்திற்குட்பட்ட சகல சுகாதார நிறுவனங்கள் ஆகியவற்றில் 2003 மே முதலாம் திகதியில் இணைந்த சேவையில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார முகாமைத்துவ சேவையில் விரும்பினால் இணைந்து கொள்ள முடியும்.

இந்த உத்தியோகத்தர்கள், தம்மை மாகாண சுகாதார முகாமைத்துவ சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான விருப்புக் கடிதத்தைப் பூரணப்படுத்தி தாங்கள் கடமையாற்றிய மாவட்டத் திணைக்களத் தலைவர்கள், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் 'செயலாளர், மாகாண சுகாதார சுதேச அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை' என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கமுடியும்- என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (51)

### நாளை ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ.பரீட்சையை குடாநாட்டில் சுமுகமாக நடத்த ஏற்பாடு

நாளை ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சையை குடாநாட்டிலும் சுமுகமான முறையில் நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் 10 ஆயிரத்து 126 பரீட்சார்த்திகள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கு வலயம் 1 இல் 43 பரீட்சை நிலையங்களும் வலயம் 2 இல் 42 பரீட்சை நிலையங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

அரச கட்டுப்பாடற்ற செம்பியன்பற்று உடுத்துறை, தாளையடி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு பளை மகாவித்தியாலயத்தில் பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சகல பரீட்சை மேற்பார்வை அதிகாரிகளையும் தமது பரீட்சை நிலையங்களுக்கு இன்று மாலை செல்லுமாறு யாழ்.மாவட்ட பரீட்சை இணைப்பாளர் கேட்டுள்ளார்.

# வன்னி அரச அதிபர்களுடன் படை அதிகாரிகள் சந்திப்பு

அத்தியாவசியப் பொருள்களை வடபகுதிக்குக் கொண்டு செல்வதில் ஓமந்தைப் பகுதியில் உள்ள நெருக்கடிகள், தாமதங்கள் குறித்தும் அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் குறித்தும் நேற்று முன்தினம் வன்னிப் பிராந்திய இராணுவ உயரதிகாரிகளுக்கும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் சோதனை நடவடிக்கைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் சோதனைச் சாவடியூடாகப் பொருள்களை ஏற்றிச்செல்லும் லொறிகளை அனுமதிப்பதில் தாமதம் ஏற்படுகின்றது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த நிலைமை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அரச அதிபர்கள் இராணுவ அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். எனினும் இதுகுறித்து படைத்தரப்பினரிடம் இருந்து உரிய பதில் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (க)

# சுழிபுரம் காட்டுப்புலம் தோட்டங்களில் கட்டாக்காலிகளால் பெரும் பயிரழிவு

சுழிபுரம், காட்டுப்புலம் பகுதியில் கட்டாக்காலிக் கால்நடைகளால் பெரும் தொல்லை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தோட்ட நிலங்களுள் பகல், இரவு வேளைகளில் உள்நுழையும் மேற்படி கட்டாக்காலி கால்நடைகள், மரக்கறிப் பயிர்களை அழித்து வருகின்றன.

இதனால், மரக்கறிப் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் -

இதுதொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (28)

# ஆஸ்திரேலிய நிதியுதவியுடன் தளபாடங்கள் அன்பளிப்பு

குருநகர்,மே 21

ஆஸ்திரேலியா அரசின் நிதியுதவியுடன் இயங்கும் புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்) குருநகர் சென்.ஜேம்ஸ் இழுவைறால் மடிச் சங்கத்துக்கு ஒரு தொகை தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த உபகரணக் கையளிப்பு நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் குருநகர் தண்ணீர்த் தாங்கி குறுக்கு வீதியில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் பி.எ.கிறேசியன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது உருக்கு அலுமாரிகள் இரண்டு, ஒரு அலுவலக மேசை, ஒரு மரக் கதிரை, 10 பிளாஸ்ரிக் கதிரைகள் என்பன வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிறுவனத்தின் திட்ட உத்தியோகஸ்தர் அ.அ.உதயகுமார், உதவித்திட்ட உத்தியோகத்தர் றஞ்சித் ஆகியோர் இந்த உபகரணங்களைக் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் குருநகர் புனித யாகப்பர் [illegible]ய உதவிப் பங்குத் தந்தை வண பிதா தயாபரன் அடிகளார், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் தலைவர் அ.அகஸ்ரின் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

குறிப்பிட்ட சங்கத்தின் உறுப்பினர்களுடன் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் ம.பிறேமன், குருநகர் சனசமூக நிலையத் தலைவர் அ.யேசுதாசன், குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத் தலைவர் அ.ஏனஸ்ற், மற்றும் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (51)

# வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு முதலுதவிப் பெட்டிகள்

யாழ்ப்பாணம்,மே 21

'வேள்ட் விஷன்' அமைப்பினால் யாழ். பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட 40 முதலுதவிச் சிகிச்சைப் பெட்டிகள் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் ஏழு சுகாதார வைத்திய பணிமனைகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கோப்பாய், மானிப்பாய், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கு தலா ஆறும் -

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு ஏழும் வழங் கப்பட்டுள்ளன என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (51)

### உதயவாக்கு

தாயின் இதயம் தான் குழந்தையின் பள்ளிக்கூடம்
-வீச்சர்

### நாளை

வைகாசி - 08
திங்கட்கிழமை
22.05.2006
திதி : தசமி
முன்னிரவு : 08.27
நட்சத்திரம் : பூரட்டாதி
பிற்பகல் : 01.33
சுபநேரம் : 11.52 - 01.22
ராகுகாலம் : 07.22 - 08.52

# புதிய குருக்களாக மூவர் திருநிலைப்படுத்தப்படுவர்

குருநகர்,மே21

பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலதாஸ் பிறாயன், ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நீக்கிலஸ் லெஸ்லி அன்ரனி, பலாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட எ.செ.கிறெசென்சியன் மரியதாஸ் ஆகியோர் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இத்திருநிலைப்படுத்தும் சடங்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் அன்றைய தினம் காலை 9.15 மணிக்கு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும்.

புதிய குருக்களாக அன்றைய தினம் திருநிலைப்படுத்தப்படவுள்ள குருக்களில் பாலதாஸ் பிறாயன் தனது முதல் திருப்பலியை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் -

நீக்கிலஸ் லெஸ்லி அன்ரனி தனது முதல் திருப்பலியை எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்திலும் -

எ.செ.கி.மரியதாஸ் தனது முதல் திருப் பலியை எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் புனித யூதாததேயு ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்க உள்ளார்கள் என்று யாழ். ஆயரின் செயலாளர் வண.பிதா செ.எ. றொசான் அடிகளார் தெரிவித்தார். (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவை களுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465)(24)



T.P.: 0777-903090
0777 246117


## பன்னிரண்டாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் துணை

திருமதி
**ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
B.A.(Hons) Eng. Trd. *(ஆசிரியர்)*



| தவப்பேறு | சிவப்பேறு |
|---|---|
| 11-01-1960 | 03-06-1994 |

திதி: 21.05.2006

இமைப்பொழுதில் எம் நெஞ்சில் இறவா அன்பே
ஞானா இனி எப்பிறப்பிற் காண்போம்?

28, கைலாயபிள்ளையார் வீதி,
நல்லூர்.
(50352)(32.11.26)

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (கணவர்),
சகோதரி,மைத்துனர்கள், மாமி, மக்கள்,
மருமக்கள், உறவினர்கள்.

## நீங்காத நினைவுகளுடன்
## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 - 09 - 1950 | 28 - 05 - 2004 |



**அமரர் சுந்தரம் மோகன்**

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
எம் இல்லத்தின் தலைவராய் இருந்தீரே
இன்முகம் காட்டி நேசமாய் பழகி
உற்றநேரத்தில் உதவிகள் பல புரிந்து
என்றும் நல்லவராய் இன்சொல் பேசி மகிழ்ந்தீரே!
எமைவிட்டு ஏன்தான் பிரிந்தீரோ?
ஈராண்டென்ன? ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்.
ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

நாச்சிமார் கோயிலடி,
கட்டுவன் தெற்கு,
கட்டுவன். (50339)(32.26.11)

தாய், மனைவி, சகோதரன்,
மைத்துனர்கள், மருமக்கள்,
பெறாமக்கள்.

## மரண அறிவித்தல்

## நடராசா ஏகாம்பிகை



யாழ்ப்பாணம், 184A, நாவலர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நடராசா ஏகாம்பிகை 18.05.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தையல்நாயகி மற்றும் ந.மெய்நெறிகண்டதேவன் (பொறியியலாளர் U.K.), ந.சச்சிதானந்தன் (பொறியியலாளர் U.K.), ந.விவேகானந்தன் (Televoice Engineers ஆனந்தன்),ந.சிவானந்தன் (கணக்காளர், Shade வவுனியா), R.கௌரிநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் மெ.உலகேஸ்வரி (U.K.), ச.ராதாலக்ஸ்மி (U.K.), காலஞ்சென்ற றஞ்சன் மற்றும் வி.ஜெயவானி (ஆசிரியை- கலட்டி மெதடிஸ் மிசன்), சி.சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஏ.ரட்ணவிங்கம் மற்றும் ஏ.பேராயிரம், Dr.A.சரவணபவன் (கொழும்பு), A.நடனசண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வே.ஜெயபாக்கியலட்சுமி, இ.முத்துக்குமாரு ஆகியோரின் அன்பு மைத்துனியும் மெ.சிவப்பிரியா (U.K.), மெ.சிவதர்சனா (U.K.), மெ.ஜெயனீ (U.K.), சகம்சினி (U.K), சசிந்துஜா(U.K), விகஜனி,சி.அபினுகா, வி.கஜன், சி.வினுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2006) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

184 A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.0776675786 , 0713106279

தகவல்:
குடும்பத்தினர்.
(50348)(21.11.26)


## House for Rent

A house close to Kachcheri with 5 rooms, 3 rooms having hot water facility & enough Parking area availble NGO's Prefered Rent is negotiable Please Contact.
T.P.: 0777496595.
(50341)


## மருத்துவ மாதுக்களுக்கு நாளை முதல் களப்பயிற்சி

யாழ்ப்பாணம்,மே21

யாழ்.தாதியர் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சியை நிறைவுசெய்த மாணவ மருத்துவ மாதுக்களுக்கு களப் பயிற்சி நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் இந்தப் பயிற்சி ஆரம்பமாகவுள்ளது.

குறித்த மாணவ மருந்துவ மாதுக்களை அன்றைய தினம் காலை 9 மணிக்கு பணிமனைக்கு சமுகம்தருமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களில் சேவை புரிவதற்காக 67 பேர் அண்மையில் நியமனம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அல்லைப்பிட்டி உப அலுவலகம் 3 லட்சம் செலவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே21

இந்த வருடத்திற்குரிய பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபையின் அல்லைப் பிட்டி உப அலுவலகம் மீள் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதற்கென 3லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் கீழ் உள்ள மேற்படி அல்லைப்பிட்டி உப அலுவலகம், நீண்டகாலமாக மீள்புனரமைப்புச் செய்யப்படவில்லை.

மாகாண குறித்துரைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், மண்டைதீவு ஆஸ்பத்திரி வீதி மற்றும் வேலணை இராசையா வீதி என்பனவும் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதேவேளை- நயினாதீவு பகுதிக்கான மின் விநியோகத்துக்கும் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய உள்ளூராட்சி திணைக்களம் அறிவித்துள்ளது.

(185)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,மே21

'ரேர்கி' வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக் கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.


## டோகா - கட்டார்
## உடனடி வேலைவாய்ப்பு

| தொழில்கள் | தொகை |
|---|---|
| மேசன் | 35 |
| தச்சுவேலைசெய்வோர் | 35 |
| கம்பி கட்டுபவர் (ஸ்ரீல்பெக்சர்) | 30 |
| பைப்பொருத்துபவர்கள் (பிளம்பர்) | 25 |
| மின்சார வேலையாள்கள் (எலக்ரிசன்) | 25 |
| கிளீனர் | 10 |
| கிளீனர் மேற்பார்வையாளர் | 03 |

குறிப்பு:- முற்பணம் அறவிடப்படமாட்டாது. விசா கையிருப்பிப்பில் உண்டு. 20 நாள்களில் பயணம். கிளீனர் மேற்பார்வையாளர்களுக்கு வெளிநாடு ஒன்றில் வேலைசெய்த அனுபவம் தேவை. ஏனையோருக்கு வேலை அனுபவம் இருந்தால் மட்டும் போதும். கொண்டு வரவேண்டிய ஆவணங்கள்.
✱ பாஸ்போட்
✱ பாஸ்போட் அளவு புகைப்படம் - 05

*தொடர்பு:-* **மைக்கல்** T.P.: 0777279813
(50265)(26.16.14)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 - 10 - 1938 | 21 - 04 - 2006 |



அமரர் **கந்தசாமி தர்மசுந்தரம்** *(வெள்ளத்தம்பி)*

அன்பிற் இனிய அப்பாவே!
எம்மை விட்டு நீங்கள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது.

கடந்த 21-04-2006 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21-05-2006) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடை பெறவுள்ளன. இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கனகத்தி வடலி,*
*நெடியகாடு, வல்வெட்டித்துறை.* (50346)(26.11)

-குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் வீரவாகு கனகசபாபதி**

(ஓய்வுபெற்ற அதிபரும் பிரபல சோதிடரும்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01-07-1931 | 23-04-2006 |

பத்து வருட
இடைவெளியில் - மீண்டும்
எங்கள் வானில்
ஒரு சூரிய வஸ்தவனம்.

அன்று ஒரு
சித்திரைத் திங்களில்
பூரண நிலவினை யிழந்தோம்.

இன்று ஒரு
சித்திரைத் திங்களில்
சூரியனையே யிழந்தோம்.

பேரொளி காட்டிய
இருவிழிகளுமே இப்ப
நம்மிடத்திலிருந்து
பறிபோய்விட்டன!

*எமது குடும்பத்தவரின் திடீர் மறைவுச் செய்திகேட்டு பல உதவிகள் புரிந்து இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (21.05.2006) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இணுவில் தெற்கு,
இணுவில்.
(50340) (24.11.26)

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிளம் குழந்தைகளுக்கும் இந்த மண்ணில் பாதுகாப்பு இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது

*கிளிநொச்சியில் நிதித்துறை செயற்பாட்டாளர்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு வியாழக்கிழமை இடம்பெற்றது. நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி நீண்ட உரை ஒன்றை ஆற்றினார். அந்த உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.*

சர்வதேசமும் சிறிலங்காவும் கூறுவது போல் தமிழர்கள் பயங்கரவாதிகளானால் இலங்கைத் தீவே சுடுகாடாகிவிடும் என்று தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி எச்சரித்துள்ளார்.

கிளிநொச்சியில் நிதித்துறைச் செயற்பாட்டாளர்களிடையே நேற்று வியாழக்கிழமை நடநத சமகால அரசியல் கருத்தரங்கில் செ.வ.தமிழேந்தி பேசியதாவது:-

இலங்கைத் தீவில் எங்கள் இனத்தின் இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்காக- இலங்கைத் தீவில் தமிழர் தங்கள் இருப்பை- தங்கள் தாயகத்தில் தமிழீழத்தில் நிலைப்படுத்திக்கொள்வதற்காக - இலங்கை விடுதலை பெறுவதற்கு முன்பே பல்வேறு அமைதி வழி முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன.

வெள்ளைக்காரரிடமிருந்து இலங்கை விடுதலைபெற வேண்டும் என்பதற்காக - 1944 ஆம ஆண்டு சோல்பரி ஆணைக் குழு அமைக்கப்பட்டது. அதற்கு முன்னால் தமிழர் தரப்புக் கருத்துகளை அப்போதிருந்த ஜி.ஜி. பொன்னம்பலம் முன்வைத்தார். அவரது கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அதன் பின்னாலே இலங்கையில் ஒற்றையாட்சியின் கீழ் தமிழர் தங்கள் அனைத்து உரிமைகளோடும் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு ஜி.ஜி.பொன்னம்பலம் முன்வைத்த கருத்துகள் எவையுமே ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அதற்குப் பின்னர் இணைப்பாட்சி திட்டத்தின் கீழ் ஐக்கிய இலங்கையில் கூட்டாட்சித் திட்டத்தின் கீழ் தமிழர் தங்கள் தாயகத்தில் மத, மொழி உரிமையைப் பேணி ஆட்சி புரிவதற்கான ஒரு திட்டத்தை தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வா முன்வைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி என மாறி மாறி அமைந்த சிறிலங்கா அரசாங்கங்களோடு அவர் பேசினார்.

1957 ஆம் ஆண்டு தந்தை செல்வாவுடன் பண்டா ஒப்பந்தம் செய்தார். அது பண்டா-செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது. அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை.

1965 ஆம் அண்டு டட்லி சேனநாயக்கவுடன ஒப்பந்தம் செய்தார். அது டட்லி-செலவா ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது. அதுவுமே செயலற்றதானது.

பேச்சுவார்த்தைகள் மற்றும் அறப் போராட்டங்கள் என எல்லாவற்றையும் நடத்தினர். எல்லாமே தோற்றுப் போயின. எவையுமே நிறைவேறவில்லை.

1970களில் ஆயுதப் போராட்டம் உருவாகி பல்வேறு அமைப்புகள் உருவாகின. எங்கள் விடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசு தலையிட்டது. இந்திரா காந்தி அம்மையார் காலத்தில் தங்களது நலன்களுக்காக எங்களுக்குப் பயிற்சி அளித்தார்கள்.

இந்திரா அம்மையார் காலத்தில் கூட பேச்சுவார்தைகள் நடைபெற்றன. வட்டமேசை மாநாடு ஒன்று இங்கே நடந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதில் கலந்துகொண்டனர். அந்தப் பேச்சுக்களிலும் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

அதற்குப் பின்னால் ஆயுதம் தாங்கிப் போராடிய அமைப்புகள் மற்றும் விடுதலைக் கூட்டணி உட்பட அன்றைக்கிருந்த அமைப்புகள் அனைத்தும் திம்புவிலே இந்திய அரசின் அனுசரணையோடு நடத்திய பேச்சுக்களும் தோல்வியடைந்தன. அந்தப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

தமிழரின் ஒப்புதலின்றி தன்னிச்சையாகவே முடிவெடுத்து இந்தியா தலையிட்டது. இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தைச் செய்தது. அந்த ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழககு இணைந்த மாகாண சபை உருவாக்கபட்டது. அதன் அதிகாரங்கள் எவையும் தமிழரது நலன்களைப் பேணுபவையாக இருக்கவில்லை.

மாகாண சபையை ஈ.பி.ஆர்.எல்.எப். ஆட்சி செய்து இந்த மண்ணை விட்டுப் போவதற்கு முன்னால் மாகாண சபையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அமைந்த மாகாண சபை தமிழர்களுக்கு எந்த உரிமையும் தராதபடியால் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்துகிறோம் என்று போலியான ஒரு நாடகத்தை ஆடினார்கள். ஆனால் அவர்கள் சில கருத்துகளை முன்வைத்தார்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தமிழரது நலன்கள் பேணப்படவில்லை என்ற கருத்தை - இந்தியாவின் கையாள்களாக இருந்த அவர்களே முன்வைத்தனர்.

ஆக இலங்கை - இந்திய ஒப்பந்தமும் எதனையும் தமிழர்களுக்குப் பெற்றுத்தரவில்லை என்பதற்கு அவர்களுடைய அந்தத் தீர்மானம் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

அதற்குப் பின்னால் பிரேமதாசவுக்கும் எங்களுக்கும் இடையே பேச்சு நடந்தது. அதுவும் தோல்வியில் முடிந்தது.

1994 ஆம் ஆண்டு சந்திரிகா பிரதமராக வந்தபோது போர் நிறுத்தம் செய்யப்பட்டு பேச்சு நடந்தது. அதுவும் தோல்வியில் முடிந்தது.

2002 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எங்கள் தலைவருக்கும் செய்யப்பட்ட உடன்பாடு - போர் நிறுத்தம் இப்போது என்ன நிலையில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

அமைதி உடன்படிக்கை ஒன்று அப்படியே இருகிறது.

போர் நிறுத்த உடன்படிக்கை அப்படியே இருக்கிறது.

அதேநேரத்தில் தமிழர் மீதான கொலை நடவடிக்கையும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

சிறிலங்கா அரசாங்கம் தன்னோடு இணைந்து நிற்கிற ஒட்டுக் குழுக்கள் மூலம் விடுதலைப் புலிகளோடு இணைந்து நின்று உழைப்பவர்களையும் தமிழ்த் தேசியத்திற்காக உழைக்கின்றவர்களையும் கொன்று குவித்து வருகின்றனர்.

ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தபின்பு இந்த நிலைமைகள் மேலும் சீரழியும் நிலைக்கு வந்தன.

ஆனாலும் எங்கள் தலைவர் பொறுமை காத்தார். இந்த அரசாங்கத்தோடும் பேசவும் முன்வந்தார். ஜெனீவாவில் நடந்த பேச்சில் உடன்பாட்டுக்கும் வந்தனர்.

துணைக் குழு அல்லது ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவது என்று அவர்கள் உறுதி தந்தனர்.

அதன்பின்னர் திருமலையில் தமிழ்த் தேசியத்திற்காக உழைத்த - தமிழரது மேம்பாட்டுக்காக உழைத்த - திருமலையில் தமிழர் இருப்பைப் பேணுவதற்காக அயராது உழைத்த விக்னேஸ்வரன் கொல்லப்பட்டர்.

அண்மையில் அல்லைப்பிட்டியில் 4 மாத குழந்தை - பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தை- அன்னைக்கும் தந்தைக்கும் நடுவே சுட்டுக் கொல்லப்பட்டுக் கிடக்கும் காட்சியை பார்த்திருப்பீர்கள். இந்த மண்ணில் வாழும் பச்சிளம் குழந்தைக்குக்கூட பாதுகாப்பு இல்லை.

நாளைக்கு உங்கள் குழந்தைக்கும் அதே நிலை வரும். அந்த நிலை வராது என்பதற்கு உறுதி எதுவும் இல்லை.

ஆகவே வலிமை உடைய - வயது வேறுபாடின்றி - அனைத்துத் தமிழர்களும் ஆயுதப் பயிற்சி பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அப்போதுதான் தமிழர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சிங்கள இரணுவம் ஊடுருவித் தாக்குதல் நடத்துகிறது. அதனோடு ஒட்டுப்படைகளும் வருகின்றனர்.

கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, பொதுமக்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான நேரமிது.

தமிழினத்தை இந்த மண்ணில் பூண்டோடு அழித்துவிட வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளை சிங்களவர்கள் நீண்டகாலமாகவே செய்து வருகின்றனர்.



யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று -

"இந்த நாட்டில் சிங்களவர்தான் வாழமுடியும் - தமிழரும் சிங்களவரும் வாழ முடியாது" என்று கூறிவருகின்றனர்.

இது சிங்கள இராணுவத்தின் கருத்து அல்ல - சிங்களவர் மற்றும் சிங்கள அரசின் கருத்து.

வரலாற்றில் துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் நடந்த போரில் எல்லாளன் கபடமாகக் கொல்லப்பட்டான். நேருக்கு நேர் நின்று போரில் கொல்லப்படவில்லை.

போர் அறத்துக்கு மாறாக அவனது யானையைத் தாக்கி அவன் விழுகின்றபோது கொன்றார்கள். அறத்தின்பால் நேருக்கு நின்று வீழ்த்தவில்லை. வஞ்சகமாக எல்லாளனைக் கொலை செய்தார்கள்.

அந்த எல்லாளன் இந்திய ஆக்கிரமிப்பாளன் என்று சொல்கிறார்கள் - எங்களையும் இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் என்றுதான் சிங்களவர் சொலகிறார்கள்.

ஆனால், தமிழர் இந்த மண்ணின் சொந்தக்காரர்கள். இலங்கைத் தீவு தமிழர்களுக்கே சொந்தமானது.

சிங்களவர்கள்தான் இந்த நாட்டின் ஆக்கிரமிப்பாளர்கள் - இந்த நாட்டினது வந்தேறு குடிகள்.

தமிழர் தங்களது சமகால வரலாற்றை சான்றுகளோடு எழுதி வைக்கவில்லை என்பது மிகப் பெரும் குறை. நாம் விட்ட தவறு அது.

ஆனால் கிடைக்கக் கூடிய தொல்லியல் சான்றுகள் அனைத்தும் தமிழரே இந்த மண்ணின் உரிமையாளர்கள் என்று தெட்டத் தெளிவாகச் சொல்லுகின்றன.

வந்தேறி சிங்களவர்கள் தாங்கள் வந்தேறியவர்கள் என்பதால் முந்திக் கொண்டு எம்மை வந்தேறு குடிகள் என்கிறார்கள்.

அப்படியானால் இந்த மண்ணிலே தமிழர்கள் எப்படி சிறுபான்மையினராக உள்ளனர்? என்ற கேள்வி எழலாம்.

(வளரும்)

# இனக்கொலைக்குள்ளாகிவரும் தமிழருக்கொருவிதம் சிங்களக் கிராமவாசிகளுக்கு இன்னொருவிதம்

## மஹிந்தரின் பாகுபாடான ஆட்சி பற்றி நாடாளுமன்றில் மாவை புட்டுக்காட்டினார்

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்கள் இராணுவ, கடற்படை, விமானப் படை மற்றும் சிங்களக் காடையர்களின் கொடூர தாக்குதல்களுக்குள்ளாகி வீடுகளை, வதிவிடங்களைவிட்டு வெளியேறி செய்தொழில்களை இழந்து நிர்க்கதியான நிலைமைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கென போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. ஆனால், சில சிங்களக் கிராமவாசிகள் கொல்லப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டவுடன் அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் கூடிப் பேசி சிங்களக் கிராமவாசிகளுக்குத் தற்காப்புக்கென ஆயுதம் வழங்குகிறார்கள்.

யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கடந்த 9ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் பேசியபோது இக் கருத்தை வெளியிட்டார். கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வெளியில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவதற்கு முன்னர் சபையில் தமது நிலைப்பாட்டை விளக்கிப் பேசியபோது அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஜெனீவாவில் போர் நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தாங்கள் எந்தவொரு அச்சுறுத்தல், வன்முறைச் செயல்கள், ஆள் கடத்தல்கள், கொலைகள் எதுவும் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது என உறுதி பூண்டிருப்பதை வலியுறுத்தியிருந்தார்கள்.

மேலும், விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படைகளுக்கும் காவல்துறையினருக்கும் எதிரான வன்செயல்களும் இடம்பெறாது நடவடிக்கை எடுக்க உறுதியளித்தனர்.

அதேபோன்று இலங்கை அரசாங்கமும் அரசாங்க ஆயுதப் படைகள் தவிர வேறெந்த ஆயுதக் குழுவோ தனிநபரோ ஆயு தங்களை வைத்திருக்கவோ ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கோ இடமளியாதிருக்கப் போர் நிறுத்த உடன்படிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தது. அத்துடன், 2006 ஏப்ரல் 19 முதல் 21 வரை ஜெனீவாவில் மீண்டும் பேச்சு நடத்துவதென்று சம்மதத்தை வெளியிட்டனர்.

இவ்வுடன்பாட்டின் விளைவாக இலங்கை அரசாங்கப் படைகளுக்கெதிரான நடவடிக்கைகள் ஒரு முடிவுக்குவந்தது. ஆனால், இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் இலங்கை திரும்பியவுடன் ஜெனீவாவில் எட்டிய உடன்பாட்டைக் குறைத்து மதிப்பிட்டும் மதிப்பு அளிக்காமலும் கருத்து வெளியிட்டனர்.

அதற்கு மேலாகப் போர்நிறுத்த உடன்படிக்கையின்படி ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை அகற்றவோ அவைகளைக் களைந்துவிடவோ தவறிவிட்டனர். அதுவுமல்லாமல் தமிழ்ப் பொதுமக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிராக இந்த ஆயுதக் குழுக்கள் பல வகையான வன்செயல்களில் ஈடுபட்டனர். இந்த ஆயுதக் குழுக்கள் இலங்கை அரசாங்கப் படைகளுடன் இணைந்து செயற்படுவது வெளிப்படையானதே.

04.03.2006 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுணதீவு முன்னணிக் காவல் அரண் தாக்கப்பட்டதும் ஐந்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டதும் இவர்களின் செயற்பாட்டைப் பகிரங்கப் படுத்தியது.

05.03.2006 அன்று அரசாங்கப் படைகளினதும் துணைப்படைகளினதும் கொலை நடவடிக்கைகள் ஒரு பொதுமகனின் கொலையுடன் வாழைச்சேனை, மட்டக்களப்புப் பிரதேசங்களில் பொதுமக்களைக் குறிவைத்து இடம்பெறத் தொடங்கின. 26.04.2006 வரை 85 தமிழ்ப் பொதுமக்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர்.

2006.04.07ஆம் திகதி திருகோணமலையில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாகவுள்ள நகரப் பகுதியில் பட்டப்பகலில் இலங்கை வங்கிக் கட்டடத்தில் வங்கி ஊழியரும் 25.12.2005 மட்டக்களப்பில் கத்தோலிக்க தேவாலயத்தில் கொலை செய்யப்பட்ட எமது அணி மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கத்தின் இடத்திற்குத் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட விருந்தவருமான வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் கொலைசெய்யப்பட்டார். அதுவரையிலும் அரசாங்கப் படைகளுக்கெதிரான எந்தவொரு வன்செயல்களும் இடம்பெறவில்லையென்பதைச் சுட்டிக்காட்டவேண்டும்.

சுட்டிக்காட்டப்படவேண்டிய இன்னொரு விடயமென்னவென்றால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் விக்னேஸ்வரனின் மரண இறுதி நிகழ்ச்சியில் பங்குகொண்டு விட்டுத் திரும்பிவரும் பொழுது திருகோணமலை அபயபுரப் பகுதியில் கடற்படையினர் முன்னிலையிலேயே சிங்கள காடையர்களினால் மோசமாகத் தாக்கப்பட்டார் என்பதாகும். ஆனால் அரசாங்கமும் சமாதானச் செயலகமும் உண்மைக்கு மாறானதும் தீய பகையைத் தூண்டக்கூடியதுமான பிரசாரங்களை உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் செய்யத் தொடங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகள் படைகளுக்கெதிரான ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டபொழுதிலும் படையினர் அளவற்ற பொறுமையைக் கடைப்பிடித்தனர் என்றே பிரசாரப்படுத்தி வருகின்றனர்.

அரசாங்கத்தினதும் அதன் சமாதானச் செயலகத்தினதும் வஞ்சகத்தனமான இரட்டை நாக்கு நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

உண்மையில் தமிழ்ப் பொதுமக்களுக்கெதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பின்னர் தான் அதுவும் 08.04.2006 திகதியின் பின்னரே அரசாங்கப் படைகளுக்கெதிரான நடவடிக்கைகள் தொடங்கின எனலாம். இதற்கு மேலாக திருகோணமலையில் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை சம்பவங்களுக்குப் பின்னரே அரசுப் படைகளுக்கெதிரான வன்முறைகள் தொடங்கின. 12.04.2006 அன்று திருகோணமலை சந்தையில் குண்டு வெடித்து ஒரு சில மணித்துளியில் சிங்களக் காடையர்களினால் இராணுவத்தின் ஆதரவுடனே அல்லது பாதுகாப்புடனே தெரிந்தெடுத்த 30இற்கும் மேற்பட்ட தமிழர்களின் வர்த்தக நிறுவனங்கள் கொள்ளையடிக்கப்பட்டு பின் தீக்கிரையாக்கப்பட்டன. 20 தமிழர்கள் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டனர். இச்செயலிலீடுபட்ட சிங்கள வெறியர்கள் இராணுவ வாகனங்களில் சம்பவம்இடம் பெற்ற இடங்களுக்குக் கொண்டு வந்து இறக்கப்பட்டனர்.

இச்செயலானது கடந்த 50 ஆண்டு காலமாக அரசுகள் கடைப்பிடித்து வந்த தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கை, திருகோணமலையிலிருந்து தமிழ் மக்களை அகற்றும் செயற்பாடுகளின் தொடர்ச்சியாகவே கருதவேண்டியதாகவுற்று.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி
## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில்
24 - 08 - 1944



விண்ணில்
23 - 04 - 2006

## திருமதி சரஸ்வதி காசிநாதர்

கடந்த 23.04.2006 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் திடீர் மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும் ஆறுதல் கூறியும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட உள்ளங்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உ )றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தார் யாவருக்கும் எமது மனமா ,த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (22.05.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்: க.பத்மநாதன்
(மகன் - இங்கிலாந்து).

(50224) (24-16-33)

## மனனப் போட்டி

சுழிபுரம்,மே21

சுழிபுரம் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலய இலச்சார்ச்சனையொட்டி நடைபெறும் கந்தரனுபூதி மனனப் போட்டியில் பங்குகொள்பவர்களுக்கான தேர்வு எதிர்வரும் 31ஆம் திகதி புதன் மாலை முதல் தினமும் தொடர்ந்து 5 தினங்கள் ஆலய மண்டபத்தில் நடைபெறும். பெயர் பதிவு செய்தவர்கள் மட்டுமே தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.(28)


அறிவுள்ளோரின் சிறந்த தெரிவு
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By: ROYAL INDUSTRIES COLOMBO-12. ☎ 0777-277670




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2567
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
100g ரோயல் குளுக்கோஸின் ஆகக்கூடிய சில்லறை விலை 25.90



# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில்
ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

### Diploma in Video Mixing

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- P: inacle Studio
- VCD Cutter
- Extra practical

Course fee :- 3000/=

### Diploma in Graphic Designing

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- CorelDRAW
- Cool 3D Studio
- Macro media Flash MX
- Introduction to 3D Albam
- Extra practical

Course fee :- 2000/=

Free Study Pack & Photos CD

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 22/05/2006 :- 08.30


solidar
INGO Consortium

## SUBJECT: INVITATION FOR BIDS

### 'Supply of Doors & Windows for 100 Tsunami Affected Houses in Chempianpattu North or Vathirayan, Vadamarachi East'

Solidar an International Non Govermental Organisations Cc nsortium consisting of (ASB, NPA & SAH) is inviting you to submit sealed bids for the supply of wooden doors and windows for the Villages Reconsruction and Development Project for Tsunami affected populations in Chempianpattu North or Vathirayan.

Registered contractors are invited to bid on sets of doors and windows for 100 houses based on their capacity.

contractors can collect the bidding dossiers from:

Solidar / ASB Construction Office,
160 Mile Post,
Farm Point,
A-9 Road, Paranthan,
Killinochchi.

Tel: 021 228 5147

Closing datc for distribution of bidding documents is May 30th, 2006.

Bidding Dossier Fee is 1000 LKR.

(C/49312) (24)

## IMMEDIATE VACANCY - Jaffna

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of Organizations from 12 European countries that supports a board portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGO's Arbeiter-Samariter-Bund (ASB), Norwegian People's Aid (NPA), and Swis Labour Assistance (SAH). Applications are requested from experienced person for the following positions:

**Technical Officer (1)**

Reporting to the Project Manager the TO is responsible for monitoring construction projects. The ideal candidate should have at least five years experience in a technical capacity, be self- motivated and independent, with excellent communication skills. Fluency in English, Tamil & Sinhala essential.

*Duties include*

- Quality control checks on contractors work - ensuring timeframes and progress
- Compilation of weekly reports and timely submission to the Project Manager
- Overall guidance for construction projects

**Administrator (1)**

Reporting to the Project Manager this position is central to the project & will require an IT proficient candidate with a high standard of professionalism, outstanding organizational & communication skills with the ability to liaise with all relevant authorities, partners, stakeholders & communities. Fluent English, Tamil & Sinhala re uird.

*Duties will include:*

- Administration, basic accounting, finance and / or book keeping
- Maintenance of files, database
- Office/staff management

**Driver/translator (1)**

- Proven 3-5 years driving experience
- Fluent command of spoken Sinhala, Tamil & English
- Knowledge of geography in place of work
- Valid license

**Period of Contract**

All positions are for 7 months (extendable): Extension will be considered based on performance and the requirement at the time

Cover letter, curriculum vitae and references should be addressed to:

Mr.Christin Justin, Solidar, No.156, Jaffna Road, Paranthan
or by email: christiyustin@gmail.com

Deadline for application is Monday 22nd of May 2006

Norwegian People's Aid — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SAH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

**உறுப்புரை – 26(தொடர்ச்சி)**

3. தமது குழந்தைகளுக்குப் புகட்டப்பட வேண்டிய கல்வியின் வகை, தன்மையை முதலிலே தெரிந்தெடுக்குமுரிமை பெற்றோருக்குண்டு.

# சமாதானம் புதைக்கப்படுகிறதா?



சுமார் 25 வருடகாலமாக இடம்பெறுகின்ற இனப்போரானது பல்லாயிரக்கணக்கான மக்களது உயிரை குடித்துள்ளது. மதிப்பிட முடியாத சொத்துக்களை அழித்துள்ளது. 80களில் தொடங்கி இடம் பெற்ற யுத்தமானது பாரிய அழிவுகளை ஏற்படுத்தியது. குறிப்பாக வடகிழக்கை சுடுகாடாக்கியது.

இந்த நிலையில் 2002ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை மோசமான யுத்த அழிவுகளுக்கு தற்காலிகமாக ஒரு முடிவு கட்டியது. கொலைகள் நின்றன. மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். மூடப்பட்டிருந்த, செய்யப்பட்டிருந்த பாதைகள் திறக்கப்பட்டன. பொருளாதார தடை பெருமளவில் நீக்கப்பட்டது. யுத்தத்தால் அழிவுற்ற பகுதிகளில் அபிவிருத்திக்கான வழிகள் ஏற்பட்டன.

இந்த மாற்றங்களால் மக்களிடையே இம்முறை சமாதானம் ஏற்படுமென்ற நம்பிக்கை ஏற்பட்டது. யுத்தத்தால் முடங்கிக் கிடந்த மக்கள் இழப்புகளுக்கு மத்தியிலும் நிமிர்ந்து நிற்க முனைந்தனர். தொழிற்துறைகளில் ஈடுபட்டனர். குழந்தைகளது கல்வி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினர். வீடுகளை திருத்தவும், புதிதாக அமைக்கவும் முனைந்தனர். இடம்பெயர்ந்த மக்களில் பலர் மீள்குடியேற முன்வந்தனர். வெளிநாடுகளுக்கு சென்றவர்களில் பலர் மீண்டும் தாய்நாட்டுக்கு வந்தனர்.

ஆனால் இவையெல்லாம் நிரந்தரமானதல்ல என்பது ஆறு சுற்று பேச்சுக்களின் முறிவுடன் மக்களுக்கு விளங்கத்தொடங்கியது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அப்போதைய பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்குமிடையே எழுந்த அதிகாரப் போட்டி முற்று முழுதாக சமாதானப் பேச்சுக்களை முடிவுக்கு கொண்டு வந்தது. இருந்தும் சில சிறிய அசம்பாவிதங்களுடன் போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இருந்தது. எனினும், தற்போது நிலைமைகள் மிக மோசமானவையாக மாறியுள்ளன. பிரகடனப்படுத்தப்படாத மட்டுப்படுத்தப்பட்ட யுத்தமொன்று இடம் பெறுவதாக போர்நிறுத்த கண்காணிப்புக்குழு ஏற்றுக்கொள்ளுமளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன.

**- என். ஜீவேந்திரன்**

தினம் தினம் படையினரும் மக்களும் ஏன் விடுதலைப்புலிகளுமே கொல்லப்படுகிறார்கள். குறிப்பாக மக்கள் வடகிழக்கு முழுவதிலும் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையானது சமாதானத்திற்கு சாவுமணி அடித்துவிட்டதை உணர்த்துகிறதா? அல்லது சமாதானத்திற்கு சவக்குழி தோண்டிவிட்டதை உணர்த்துகிறதா? சமாதானம் மெல்ல மெல்ல புதைக்கப்படுகிறதா? இதுவே மக்கள் முன் இன்றுள்ள கேள்விகளாகும். இதற்கு பதிலை யார் தருவார்?

## கருத்தாடல் களம்

### தமிழ் மக்களுக்கு பாதுகாப்பில்லை

வடகிழக்கில் இடம் பெறுகின்ற வன்முறைகளால் தமிழ் மக்களுக்கு முற்றுமுழுதாக பாதுகாப்பு இல்லாத நிலையே ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் சாதாரண தமிழ் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள். இதனை புலிகள் உட்பட யாராலும் தடுக்க முடியவில்லை. பயந்து பயந்து வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு இன்று யாராலும் பாதுகாப்பு இல்லை என்பதே உண்மையாகும்.

ஆர். சரஸ்வதி
திருகோணமலை

### சிங்கள மக்களுடன் இணைந்து செயற்படவேண்டும்

சிங்கள பேரினவாத, சுயநல அரசியல்வாதிகளுக்கு தமிழ் மக்கள் குறித்து எவ்வித அக்கறையும் இல்லை. எனவே அவர்களுக்கு தமிழ் மக்களது நிலையை எடுத்துச் சொல்வதில் அர்த்தமில்லை. ஆனால் சிங்கள பொதுமக்களிடம் எமது நிலையை எடுத்து விளக்குவது எமக்கு பலன் தரக்கூடியதாகும். வடகிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறுகின்ற அநியாயங்களை சிங்கள மக்களுக்கு எடுத்து விளக்க இன்று ஊடகமோ, வேறு அமைப்புகளோ இல்லை. எனவே உடனடியாக இதனை மேற்கொள்வதற்கு ஏதாவது ஒரு வழி காணப்பட வேண்டும். காரணம் பொதுமக்களின் பலம் அலட்சியம் செய்ய முடியாததாகும்.

வத்சலா பேரின்பநாயகம்
யாழ்ப்பாணம்

# தலவாக்கலை நீர்த்தேக்கத் திட்டம்

## பின்னணியும் எதிர்ப்பியக்கமும் மலையகத்தலைமைகளும்

**- மோகன்ராஜ்**

(கடந்தவார தொடர்ச்சி)

மகாவலி ஆற்றின் பிரதான கிளை தலாவாக்கலை பிரதேசத்தில் உள்ள டயகம பகுதியில் ஊற்றெடுத்து தலாவாக்கலை வழியே பாய்ந்தோடுகிறது. அதன் இருமருங்கிலும் பச்சைக்கம்பளம் விரித்தாற்போல தேயிலைத் தோட்டங்கள் விரிந்து கிடக்கின்றன. அவை மலையக தமிழர்களின் வியர்வையாலும் இரத்தத்தாலும் உருவாக்கப்பட்டவை. எனினும், அவை அவர்களின் ஜீவனோபாய ஜன்ம பூமியாக இப்போது மாறியுள்ளன. அங்கே பிறந்து, வளர்ந்து, விளையாடி, அங்கே கோயில் அமைத்து, வழிபட்டு, அங்கே படித்து, அங்கே திருமணம் செய்து, அதிலே வேலை செய்து, காலம் முழுவதும் அங்கே வாழ்ந்து இறந்த பின்னரும் அந்த மண்ணிலே புதைக்கப்படும் மக்கள் சமூகமாக வாழும் அவர்களுக்கு அனைத்தையும் வழங்குவது அந்த ஜன்மபூமிதான். அம்மண்ணை விட்டு வெளியேற்றப்படும் அதே நிமிடம் அவர்களது வாழ்க்கை அடியோடு அஸ்தமனமாகி விடும் அளவிற்கு அவர்களது வாழ்க்கை அம்மண்ணோடு பின்னிப்பிணைந்துள்ளது. இந்த நிதர்சனமான நிலமையை படம்பிடித்து காட்டிய பல சம்பவங்கள் ஸ்ரீமாபண்டாரநாயக்க ஆட்சிகாலத்தில் (1971 - 1977) இடம்பெற்றன. காணி சீர்திருத்தம் என்கிற பெயரில் சுவீகரிக்கப்பட்ட பல பெருந்தோட்டங்களில் இருந்து தோட்டத்தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்பட்டு தெருக்களில் பிச்சைக்காரர்களாக திரிந்தனர். பெருமளவில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் மலையக தமிழர் விரட்டியடிக்கப்பட்ட பெருந்தோட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டது.

ஜே. ஆரின் ஆட்சிக்காலத்தில் காமினி திசாநாயக்க தலைமையில் மலையக தமிழர் வாழ்ந்த ஜன்ம பூமியில் சிங்கள குடியேற்றங்களை நிறுவும் பணி ஒரு புதிய பரிணாமத்தை அடைந்தது. மகாவலி அபிவிருத்தி திட்டம்

## கண்டது.. கேட்டது.. படித்தது..

அவரது நோக்கத்தை நிறைவேற்றும் வலிமை மிக்க அரசியல் கருவியாக பயன்பட்டது. மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்க துணைத்திட்டம் மலையக மக்கள் செறிவாக வாழ்ந்த தெல்தெனிய பிரதேசத்தில் இருந்து இவர்களை பாரிய அளவில் வெளியேற்றியது. இவ்வாறு மலையக தமிழர் வெளியேற்றப்பட்ட நிலங்கள் யாவும் விக்டோரியா திட்டத்திற்கு பயன்படுத்தப்படவில்லை. மாறாக சுவீகரிக்கப்பட்ட தமிழர்களின் பெருமளவு நிலம் வேறுபணிகளுக்கே பயன்படுத்தப்பட்டது. இவற்றில் கணிசமான நிலம் சிங்கள குடியேற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டது. நீரேந்து பகுதிகளில் காடு வளர்ப்பதற்காக என்று காரணம் காட்டப்பட்டு தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதிலே வேடிக்கையான ஒரு விடயம் இடம்பெற்றது. இலங்கையில் மிகச் சிறந்த, விசாலமான கோல்ப்(Golf) மைதானம் ஒன்றும் இம்மண்ணிலே அமைக்கப்பட்டது. இந்த அநீதிக்கு எதிராக தோட்டத்தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து போராட்டம் நடத்திய போது நிலமையை சமாளிப்பதற்காக காலஞ்சென்ற அமைச்சர் தொண்டமானின் ஒத்துழைப்பு அந்த கோல்ப்(Golf) மைதானத்தை அமைக்கும் நிறுவனத்தால் வாங்கப்பட்டது. இதை விட மோசமான நிகழ்வுகள் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் மற்றுமொரு அங்கமான மேல் கொத்மலை நீர்த்தேக்க திட்டம் நிறைவேற்றப்பட்ட போது நிகழ்ந்தன. கொத்மலைப் பகுதி கிராமங்களில் இருந்து தவிர்க்க இயலாத சூழலில் சிங்கள கிராமவாசிகள் வெளியேற்றப்பட்டனர். இவர்களை உரிய முறையில் மீள்குடியேற்றும் பணி செவ்வனே நிறைவேறியது. தோட்டத்தொழிலாளர் இரவோடு இரவாக விரட்டியடிக்கப்பட்டதை போன்ற அநீதிகள் இங்கு இடம்பெறவில்லை. இழக்கப்பட்ட காணிகளுக்கு உரிய முறையில் நஷ்ட ஈடு வழங்கப்பட்டது. மாற்றீடாக வேறு இடங்களில் காணியும் வீடு கட்டுவதற்கு கடன் உதவியும் வழங்கப்பட்டன. அரசாங்கத்தின் செலவில் அரச வாகனங்களில் அவர்கள் மீள் குடியேற்றப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். கொத்தமலை நீர்த்தேக்க திட்டத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள கிராமவாசிகளுக்கு வழங்கப்பட்ட நஷ்ட ஈடு பற்றியோ சலுகைகள் பற்றியோ எவரும் பொறாமை படத்தேவையில்லை. அவர்களுக்கு இன்னும் அதிகமாகவே வழங்கப்பட்டிருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால், இங்கு இரு சமூகங்களுக்கும் வெவ்வேறு விதமான கரிசனை வழங்கப்பட்டமை தான் சுட்டிக் காட்டப்படவேண்டிய விடயமாகும். இதைவிட கொத்மலை நீர்த்தேக்கத்தால் மலையகத் தமிழர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள் என்பது தான் பிரதான விடயமாகும்.

(மிகுதி அடுத்த வாரம்)

நன்றி - தேன் இணையத்தளம்

## சமாதான நிகழ்வு



இரு தசாப்தகால யுத்தம், 2004 இல் நிகழ்ந்த சுனாமி அனர்த்தம், தற்போது தொடரும் வன்முறைகள் மற்றும் இனமுரண்பாடுகளினால் நிலைகுலைந்து போயுள்ள இலங்கை மக்களது நல்வாழ்வு மற்றும் பொருளாதாரம் என்பவற்றினை புனர்நிர்மாணம் செய்யவேண்டிய பாரிய தேவை காணப்படுகிறது. இதனை உணர்ந்த பல்வேறு அமைப்புக்கள் அரசோடு இணைந்து பல அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து வருகின்றன. அந்தவகையில் 'நாட்டின் இளைஞர் வளத்தை தொண்டர் சேவையினூடாக உள்வாங்கி அபிவிருத்தி பணிகளில் அவர்களினது பங்களிப்பினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் தொண்டர் சேவையானது வொய்ஸ்(ஏழைஉந) என்றழைக்கப்படுகின்ற தொண்டர் தகவல் மற்றும் ஒன்றிணைப்பு ஆய்வு நிலையத்தினை கடந்த 2006 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பௌத்தாலோகவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் மாநாட்டு மண்டபத்தில் அங்குராட்பணம் செய்துவைத்தது.

## வாசகர் கவனத்திற்கு...

**கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.** அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

*எழுதி அனுப்ப வேண்டிய முகவரி*

**விழிப்பின் பதிவுகள்**
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டி.பி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி: - villippu@yatv.net

## எங்கள் வாழ்வு

இருண்ட தேசம்
முட்கள் படர்ந்த நிலப்பரப்பு

நடந்தன கால்கள்
வேதனையின் துடிப்பில்

வதையும் இதயத்தில்
மீண்டும் அம்புகள்

தூங்காத இரவுகள்
கற்பனையல்ல காவியமாய்

நிலவைக் காணாத கண்கள்
கம்பிக் கூண்டுக்குள்

விடுதலைக்காய் போராட்டம்
கண்ணீரை மட்டும் சிந்தவில்லை

குருதியையும் சிந்தி விட்டோம்
சிறகுகள் உடைந்து

வாழ்கின்ற துன்ப வாழ்வில்
சிறகுகள் விரித்து

வாழ்கின்ற நிலமை
என்று தான் மாறுமோ

சி. இன்பராஜ்
மீசாலை மேற்கு
மீசாலை

## சலிப்பு

மனிதம் மரணித்து போயிற்று
மனிதாபிமானம் காணாமற்போயிற்று
மரணம் மலிந்து போயிற்று
கொலை வெறியர்
கொடும்பாவம்
கூடிப்போயிற்று
பேச்சு பேச்சு என்று
கேட்டுக்கேட்டே
மனசு சலித்துப்போயிற்று
கொடுக்க வேண்டியதை
கொடுப்பதற்கும்
பகிரவேண்டியதை
பகிர்வதற்கும்
தடைபோட்டே
அதிகார சமூகமும்
பழகிப்போயிற்று
போர் நிறுத்தம்
பொய்யாகிப்போயிற்று
சமாதானம் சமரசம்
இன்றியே
காலங்கள் கடந்து போயிற்று

முல்லைச்செம்மதி
செம்மலை
முல்லைத்தீவு




விழிப்பு நிகழ்ச்சி **TNL** அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு **7.25** மணிக்கு ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் 0112787041-9 தொலைநகல் இலக்கம் 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓதுவார்களை உருவாக்க அமைப்பு அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,மே21

தென்மராட்சிப் பிரதேச இந்து ஆலயங்களில் புராண படனம் படிப்பதற்கு ஓதுவார்களை உருவாக்குவதற்கென அமைப்பு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி புராண சபை என்னும் பெயரில் இவ்வமைப்பு இயங்கவுள்ளது.

சங்கத்தானையில் டாக்டர் எஸ்.எஸ் அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வரணி மகாவித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் இச்சபைக்கான நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர். பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு இந்து ஆலயங்களிலிருந்தும் தலா இருவர் வீதம் அழைக்கப்பட்டு சபையினால் புராணபடனம் போதிக்கப்படவுள்ளது. பயிற்சி பெறுவோர் தமது ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் புராண படனத்தை ஏனையோருக்குக் கற்பிப்பர். (117)

# இனக்கொலைக்குள்ளாகி வரும்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

25.04.2006 அன்று கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் உடன் விளைவாகவே வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்பொதுமக்கள் மீது ஜெனீவா பேச்சு உடன்பாடுகளுக்கு எதிர் மாறாக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அதன் விளைவாக திருகோணமலை - மூதூர் மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் கிராமங்களில் பொதுமக்கள் மீது கண்மூடித் தனமான விமானக் குண்டு வீச்சு, கடலிலிருந்தும் தரையிலிருந்தும் ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்கள் 25.04.2006 மாலையும் இரவும் 26.04 வரை தொடர்ந்தன. அதனால் குழந்தைகள் உட்பட 16 தமிழர்கள் கொல்லப்பட்டனர். முஸ்லீம் மௌலவியும் கொல்லப்பட்டார். பலர் படுகாயமடைந்தனர். இத்தகைய தமிழ் பேசும் மக்களுக்கெதிரான அரச பயங்கரவாதஇனவாதநடவடிக்கைளினால் 40 ஆயிரம் தமிழ் பேசும் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். கல்வி நிறுவனங்கள் தமிழ் மக்களின் சொத்துக்கள் சேதமடைந்தன.

1958ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக இனக்கொலைக்குள்ளாக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆனால் தமிழ் மக்கள் இம்மாதிரி கொடுமைகளை எதிர்த்து ஆயுதம் கொண்டு போராடவில்லை. அண்மையில் ஐந்து அல்லது ஆறு சிங்களக் கிராமவாசிகள் கொல்லப்பட்ட தகவலையடுத்து அமைச்சர்கள் உயர் இராணுவ அதிகாரிகளைக் கொண்ட கூட்டமொன்று நடைபெற்றது. எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்களக் கிராமவாசிகளுக்கு தற்காப்புக்காக ஆயுதம் வழங்குவதென்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேபோல் வேறு சிங்களக் கிராமங்களிலும் ஆயுதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகாலமாக இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் சிங்களத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் தமிழ்மக்கள் ஒடுக்குறைக்கு ஆளாகி வந்துள்ளார்கள். அவர்கள் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து துரத்தப்பட்டுள்ளார்கள். விவசாயம், மீன்பிடித்தல் போன்ற வாழ்வாதார தொழில்களில் ஈடுபடமுடியாதபடி தடுக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால், தமிழ் மக்களுக்குகெதிராக ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை சிங்கள மக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துகொள்ள ஆயுதம் வழங்கப்பட்டு வருகின்றது என்ற உண்மையை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். - என்றார் அவர்.





எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

Distributor Eastern Province
Mr Multi Power
Main Street, Maruthamunai.
Tel: 077 3040623, 077 6180567

Sole Agents:
Seri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

## Vacancy

Applications are invited from suitable person to fill the post of **Conflict Resolution Manager.**

**Qualifications and skills required**

1) Should have a pass in G.C.E. A/L.
2) Should have distinction pass in English at G.C.E. O/L.
3) Good analytical, management and communication skills.
4) Ability to perform in a compl x and highly sensitive political environment
5) Ability to facilitate and mana complex ideas.
6) Highly flexible and willing to work under conditions of ongoing change.
7) Extensive field experience.
8) Mature, self - relient, a team player and problem-solver.
9) Must be able to communicate Thamil, English and Sinhala.
10) Must be able to write reports in English.

NB
Applicants who do not have the above mentioned requirements, please avoid applying **Closing Date - 26.05.2006**

**Applications should be sent to:**
**Northern Regional Field Director,**
**SewaLanka Foundation, Tsunami Office,**
**Thirunagar,**
**Kilinochchi.**
By mail or Fax
Fax and T.P No.: **0212283957.** (C/49331)

## தொழில் பயிற்சியும் – வேலைவாய்ப்பும்

தனா மேன்பவர் பிரைவட் லிமிட்டட் - இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்டியுட் இரு நிறுவனங்களும் இணைந்து தொழில் பயிற்சி இல்லாதோருக்கும், தொழில் திறமை இல்லாதோருக்கும் - திறமையான தொழில் பயிற்சி வழங்கி உடனடியாக வேலை வாய்ப்பு வழங்கி வ்ருகின்றோம்.

<u>தொழில் பயிற்சி காலம் 1 மாதம் முதல் 6 மாதம் வரை:</u>

மேசன், சட்டரிங் கார்ப்பெண்டர், பார்பெண்டர், பிளம்பர், பைப்பிட்டர், A/C மெக்கேனிக், டக்ட் மெக்கேனிக், வெல்டர், எலெக்ட்ரோ மெக்கேனிக்கல் டெக்னீசியன், பெப்ரிகேட்டர், ஸ்கெப்போல்டர், இலெக்ட்ரீசியன்.

தொழில் பயிற்சி முடிந்தவுடன் உடனடி வேலைவாயுப்பு, சம்பளம் (20000) இருபதாயிரத்திற்கு மேல்.

பயிற்சியின் போது பொறியியலாளரின் வரை படம் பார்த்து ஆங்கிலம் மொழிபேசி சர்வதேச தரத்திற்கு நிகராக தொழில் புரிய பயிற்சி அளிக்கப்படும். அத்துடன் Saftey Kit - பாதுகாப்பு சாதனங்கள்வழங்கப்படும். பயிற்சியின் போது தேவைப்படுவோருக்கு உணவும், தங்கும் வசதி உண்டு.

இந்தியாவின் டாடா நிறுவனத்தின் உறுப்பு நிறுவனமான **Voltas** நிறுவனத்துடனும் லண்டனில் இயங்கிவரும் **City & Guilds** நிறுவனத்துடனும், இலங்கை அரசாங்கத்தின் நிறுவனமான **Vocational Training Authority** ஆகிய நிறுவனத்தினுடன் இணைந்து தொழில் பயிற்சி வழங்கி உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ் வழங்கி தொழில் பெற்றுக்கொடுக்கின்றோம்.

உடனே இணைந்து உங்களது எதிர்காலத்தை நல்ல தொழிலுடன் ஆரம்பியுங்கள்.

**செய்யும் தொழிலே தெய்வம் திறமை தான் நமது செல்வம்**

இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியுட்
Industrial Training Institute (ITI)
571, சிலாபம் வீதி, கட்டுவ, நீர்கொழும்பு
தொ.பே. 031-4872869 / 077-3124787
(Member of DANA Group)

## மலேசியா நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ள மலேசியா மொழி கற்பித்தல்.

தனா மேன்பவர் (பிரைவட்) லிமிட்டட் மலேசியா அரசாங்கத்தாலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தாலும் மலேசியா மொழியை கற்பிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மலேசியா நாட்டிற்கு விசா பெற விரும்பும் அனைவருக்கும் **.MLVK** சான்றிதல் கட்டாயம் தேவை. கற்றுக்கொள்ள விரும்புவோர் உடனடியாக எங்களது காரியாலயத்தை தொடர்பு கொள்ளவும். தங்கி படிக்க விரும்புவோருக்கு தங்கும் வசதி சாப்பாடு வசதி உண்டு.

**தனா மேன்பவர் (பிரைவட்) லிமிட்டட்.**
இல. 104, செட்டியார் தெரு, 2ம் மாடி, கொழும்பு - 11.
Tel : 011 - 5333346 / 7 / 8 / 9.

**தனா இன்டர்நெசனல் கல்வி நிலையம்.**
இல. 4, பம்பலப்பிட்டி டிரைவ், பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.
Tel : 011 - 4510456 / 7

**இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்ட்டிட்டியு.**
இல. 571, கட்டுவ, சிலாபம் வீதி, நீர்கொழும்பு.
Tel : 031 - 4872869.

## எலெக்ட்ரோ மெக்கேனிக்கல் டெக்னீசியன்-பாடத்திட்டம்
## Electro Mechanical Technician-Course

எலெக்ட்ரோ மெக்கேனிக்கல் டெக்னீசியன் பாடத்திட்டம் மிகவும் பிரபலம் வாய்ந்தவை. இந்தப்பாடத்திட்டத்தை படித்து முடிப்போருக்கு மத்திய கிழக்கு நாடுகளிலும் இலங்கையிலும் உடனடியாக வேலைகள் காத்திருக்கின்றன. இந்தப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒரு நபர் பல வேலைகளை (Multy Skilled) கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இதன்படி **Electrical, Air Conditioning, Plumbing, Pipe Fitting, Welding, Ducting, Safety, Attitude & English** இவை அனைத்தும் கற்பிக்கப்படுகின்றன.

**காலம் 06 மாதம்**
**தங்கும் வசதி, உணவு வசதி உண்டு.**

இப்பாடத்திட்டம் இந்தியாவின் டாட்டா நிறுவனத்தின் கிளை நிறுவனமான Voltas Bombay, India Ltd. ஆல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் முடிந்தவுடன் டாட்டா நிறுவனத்தின் வெளி நாட்டில் நடாத்தப்படும் கட்டுமான பணிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர். அத்துடன் தனா மேன்பவர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தால் ஏனைய வேலைத்தலங்களில் வேலை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் உலகம் முழுவதும் ஏற்றுகொள்ளக் கூடிய சான்றிதல் வழங்கப்படும். நீங்களும் **Multy Skilled Technician** ஆவதற்கு உடனே எங்களை தொடர்புகொள்ளவும்.

இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியுட்
Industrial Training Institute (ITI)
571, சிலாபம் வீதி, கட்டுவ, நீர்கொழும்பு
தொ.பே. 031-4872869 / 077-3124787
இது ஒரு தொழில் பயிற்சி மையம்
Member Of Dana Group

DANA ADVERTISING & PROMOTIONS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கேற்ற விதை உற்பத்தித் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பம்

பரந்தன்,மே 21

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முல்லைத்தீவு மாவட்டத்தில் சூழலுக்கேற்ற விதை உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் இணைந்தே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நிதி வழங்கும் நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

புதுக்குடியிருப்பு உடையார்கட்டுப் பிரதேசத்திற்கான பயனாளிகளுக்கு பணம் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்திலும் குமுழமுனை - முள்ளியவளைப் பிரதேச பயனாளிகளுக்குப் பணம் வழங்கும் நிகழ்வு முள்ளியவளை ஓ.ஜி.ஆர்.நிறுவனத்திலும் மல்லாவி - துணுக்காய் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பணம் வழங்கும் நிகழ்வு யோகபுரம் விவசாய சேவை நிலையத்திலும் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் வைத்து அமினோ பீனோன் இயற்கை உரம் முன்மாதிரித் துண்ட பரிசோதனைக்காகப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. வடக்கு - கிழக்கு கிராமிய அபிவிருத்தி சேவை நிறுவனத்தால் இலவசமாக இந்த உரம் வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதற்தடவையாக இத்தகைய விதை உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (352)

### கரபந்தாட்டத்தில் மல்லாவி மத்திய வி.க வெற்றி

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்டம் (ஆண்கள் பிரிவு) கடந்த மாத இறுதியில் வண்ணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டியில் மல்லாவி மத்திய விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் கோட்டைகட்டியகுளம் விளையாட்டுக் கழகம் 2ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (322)



*வன்னிப் பெருநிலப்பரப்பில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் உழவு இயந்திரப் பயன்பாடு குறைந்தளவிலேயே இடம்பெறுகிறது. உழவு இயந்திரத்துக்குப் பதிலாக விவசாயிகள் மாடுகளைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.*

*முல்லைத்தீவு மல்லாவிப் பகுதி வயலொன்றில் விவசாயிகள் ஏர் பூட்டி உழுவதைப் படத்தில் காணலாம்.*

*(படம்: பரந்தன் செய்தியாளர்)*

## சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க முன்பள்ளி மாணவருக்கு உண்டியல்கள்

புதுக்குடியிருப்பு,மே 21

புதுக்குடியிருப்பு திருமுகபுரம் முன்பள்ளியில் மாணவர்களுக்கு சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க உண்டியல்கள் வழங்கப்பட்டன.

முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் வடக்கு - கிழக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தின் நிதியுதவியுடனும் உண்டியல் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

முன்பள்ளி மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் சேமிப்பு விழிப்புணர்வுக் கருத்துரையை முல்லைத்தீவு வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.ஜெயம் சபாபதி வழங்கினார். முன்பள்ளி மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் திருமதி து.கலைவாணி, கல்வி அபிவிருத்தி இணைப்பாளர் சி.ஜெகதீஸ்வரி ஆகியோர் மாணவருக்கு உண்டியல்களை வழங்கினர். (353)

## மன்னாரில் 230 பேர் தேசியப் படையில் இணைவு

மன்னார் அடம்பன் பிரதேசத்தில் 230 பேர் தம்மை தமிழீழத் தேசியப் படையில் இணைத்துக் கொண்டனர்.

இதற்கான நேர்முகத் தேர்வில் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

இந்த நேர்முகத் தேர்வின் மூலம் தமிழீழ தேசியப் படை கட்டுமானத்திற்கமைவான தகுதிகளைக் கொண்ட 230 பேர் தெரிவாகினர். இவர்கள் உடனடியாகவே தம்மைத் தேசியப் படையில் இணைத்துக் கொண்டனர்.

அடம்பன் பிரதேசத்திற்குட்பட்ட மக்களுக்கு நடைபெற்ற இந்த தேர்வினைத் தொடர்ந்து அடுத்த கட்டங்களாக மன்னார் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் இத் தேர்வு நடைபெறும் என மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்துள்ளார். (352)

## ஒட்டுசுட்டானில் கடன் வழங்கல் நிகழ்வு

ஒட்டுசுட்டான், மே 21

முல்லைத்தீவு கிராமிய அபிவிருத்தி வங்கியினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சிறப்புக்கடன் வழங்கல் நிகழ்வு நடத்தப்பட்டது. இதில் நாற்பது இலட்சத்து அறுபத்தேழாயிரம் ரூபா 111 பேருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி வங்கியின் ஒட்டுசுட்டான் இணைப்பாளர் சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், சூரிய மின்கலங்கள், இரு சக்கர உழவு இயந்திரங்கள், தெளிகருவிகள்; தையல் இயந்திரங்கள் என்பவற்றுடன் 60 பயனாளிகளுக்கு சிறுபோகக் கடன் வழங்கப்பட்டது. அத்துடன் 12 பயனாளிகளுக்கு சுயதொழில் கடனும் வழங்கப்பட்டது. (341-353)

### சிறுபோகத்தில் ஆர்வமில்லை

ஒட்டுசுட்டான்,மே 21

கற்சிலைமடு பெரியகுள சிறிய நீர்ப்பாசனத் திட்டம், முத்தயன்கட்டு குள நீர்ப்பாசனத் திட்டம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. நெல்லுக்கு உரிய விலை கிடைக்காததாலேயே விவசாயிகள் சிறுபோகத்தில் அக்கறை செலுத்தவில்லை என்று கூறப்படுகிறது. (341)

### வண்ணன் வி.க.முதலிடம்

மல்லாவி,மே 21

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. இதில் வண்ணன் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் யோகபுரம் மத்திய விளையாட்டுக் கழகம் 2 ஆம் இடத்தையும் பெற்றன. (323)

### சமகால அரசியல் கருத்தரங்கு

மல்லாவி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் கோட்டக் கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தலைவரின் கருத்துக்களைத் தொடர்ந்து மல்லாவி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அருந்தவம் கருத்துரையினை வழங்கினார்.

நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்ட நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் மல்லாவிக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். (352)

# தவறான தகவல்; பொறுப்பற்ற அறிக்கை மன்னிப்புச் சபைக்கு ஈ.பி.டி.பி. கண்டனம்

யாழ். தீவகத்தில் கடந்த 13ஆம் திகதி அப்பாவிப் பொதுமக்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் ஈ.பி.டி.பியும் தொடர்புபட்டிருக்கின்றது என்று சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டிருக்கின்ற அறிக்கைக்கு ஈ.பி.டி.பி. பலத்த கண்டனத்தையும், கவலையையும் தெரிவித்திருக்கிறது.

இது குறித்து ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைமையத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

தவறான தகவல்களை அடிப்படையாக வைத்து பொறுப்பற்ற முறையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது என்று அந்தக் கடிதத்தில் வர்ணித்திருக்கிறார் அமைச்சர் டக்ளஸ்.

அரசியல் ரீதியில் மட்டுமே தாங்கள் அரசுடன் பங்குகொடுத்திருக்கிறார்கள் என்றும் - படை நடவடிக்கைகளில் தங்களுக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் பேசும் மக்கள் சந்தித்து வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை அக்கறை காட்டி வருவதற்கு நன்றி சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஆனாலும், ஆதாரங்களையும் அதற்கான தகவல்களையும் சரிவர உறுதிப்படுத்தாமல் அறிக்கை வெளியிட்டிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபையின் அவசர நடவடிக்கை அந்த அமைப்பின் மீதான நம்பகத்தன்மை மீது சந்தேகங்களைக் கிளப்பியிருக்கின்றது!

கடந்தவாரம் மே 13ஆம் திகதியில் யாழ். தீவகத்தில் வைத்து அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைச் சம்பவங்கள் மனச்சாட்சியை அடகு வைத்துவிட்ட மனித மிருகங்களின் மிலேச்சத்தனமான நடவடிக்கை என்பதில் மறு கருத்திற்கு இடமில்லை.

இது குறித்து ஈ.பி.டி.பியினராகிய நாம் எமது கண்டனத்தையும் சொல்லித் தீராத கவலையையும் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றோம்.

யாழ். தீவகத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிக் குடிமக்கள் எமது நீண்டகால உறுப்பினர்களது உறவினர்களாகவும் எமது கட்சியின் ஆதரவாளர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்ற துயரத்தையும் நாம் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

இந்நிலையில் ஈ.பி.டி.பியினராகிய எமது உறுப்பினர்களும் இந்தப் படுகொலைச் சம்பவ இடத்தில் நின்றிருக்கின்றார்கள் என்று தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்திருக்கும் அறிக்கை உண்மைக்கும் நேர்மைக்கும் மாறான கருத்தாகும்.

பருத்தித்துறையிலிருந்து புத்தளம் ஈறாக பொத்துவில் வரைக்கும் அகன்று பரந்திருக்கும் தமிழ்பேசும் மக்களின் தாயக நிலப்பரப்பெங்கிலும் - கொழும்பிலும் பணிமனைகளை அமைத்து மக்களுக்காக உழைத்து வருகின்றவர்கள் நாம்!

இங்கெல்லாம் நாமும் இருக்கின்றோம் என்பதால் இங்கு நடக்கின்ற படுகொலைகளோடு ஈ.பி.டி.பியினராகிய எம்மையும் சம்பந்தப்படுத்திவிடமுடியுமா...?

எமது பணிமனைகள் சட்ட விரோதமாக எங்கும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. எமது உறுப்பினர்களின் நடவடிக்கைகளும் நடமாட்டங்களும் ஜனநாயக வரம்புகளை மீறியதாகவும் இல்லை என்பது சர்வதேசமும் உணர்ந்த உண்மை.

நாம் அரசியல் ரீதியாக மட்டுமே அரசில் பங்கெடுத்து வருபவர்கள். படை நடவடிக்கைகளில் எமக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

மனிதப் படுகொலைகளின் மூலம் குறித்த இலக்கை அடையமுடியாது என்பதும், அவைகள் மக்கள் விரோத நிலைப்பாடு என்பதும் ஈ.பி.டி.பியின் அரசியல் ஆதார கருத்தியலாகும். ஆகவேதான் தொடரும் படுகொலைகள் யாரால் நடத்தப்பட்டாலும் அதை ஈ.பி.டி.பியினராகிய நாம் வன்மையாகக் கண்டித்து வருகின்றோம்.

எமது மண்ணில் நடக்கும் படுகொலைகளை சர்வதேச அரங்கில் பகிரங்கப்படுத்துவதிலும் அம்பலப்படுத்துவதிலும் ஈ.பி.டி.பி. முடிந்தளவு பங்காற்றி வந்திருக்கின்றது. காணாமல் போனவர்கள், கண்ட இடத்தில் சுட்டுக்கொல்லப்பட்டவர்கள், சிறைவைக்கப்பட்டவர்கள், அச்சுறுத்தப்பட்டவர்கள் என அனைத்து மனித உரிமை மீறல்கள் குறித்தும் சர்வதேச சமூகத்திற்குக் கொண்டு சென்றவர்கள் நாங்கள். இவைகள் குறித்து நாம் சமர்ப்பித்திருக்கும் அறிக்கைகள் பலவும் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் ஆவணமாக இருக்கும் என நம்புகின்றோம்.

தொடரும் படுகொலைகளுக்கான பொறுப்பையும், தாமே புரிந்துவிட்ட படுகொலைகளுக்கான பழியையும் ஈ.பி.டி.பி. மீது சுமத்துவது புலிகளின் பொய்யான பரப்புரைகளாகும்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமை குறித்தும் அபிவிருத்தி மற்றும் அன்டாறப் பிரச்சினைகள் குறித்தும் நடைமுறைச் சாத்தியமான வழியில் நின்று ஈ.பி.டி.பியினராகிய நாம் முடிந்தளவு உழைத்துவருவதால் யுத்தத்தின் விளைவுகளால் துயரப்படுகின்ற மக்கள் ஈ.பி.டி.பியை நோக்கி அணி திரண்டு வருவதனால்.. அதற்கான உள் மன விருப்பங்களைக் கொண்டிருப்பதால்... ஜன நாயக பன்மைத்துவ அடிப்படையிலும்... சர்வதேச நாடுகளெங்கும் காணப்படுகின்ற அரசியல் ஜனநாயகக் கட்டமைப்பின் அடிப்படையிலும் புலிகளின் ஏக பிரதிநிதித் துவ எண்ணங்களை நிராகரித்து ஈ.பி.டி.பி. களத்தில் நின்று உழைத்து வருவதால்...

ஈ.பி.டி.பியினராகிய எம் மீது படுகொலைகளை நடத்துவதும் எம்மீதான பொய்யான பரப்புரைகளைச் செய்து வருவதும் புலிகளின் நீண்டகால நடவடிக்கையாகு .

இந்த வரிசையில் யாழ். தீவகத்தில் நடத்தப்பட்டிருக்கும் படுகொலைகளுக்கான சம்பவத்தையும் எம்மீது இன்று புலிகள் சுமத்தியிருக்கின்றார்கள்.

வடக்கு - கிழக்கில் இருந்து இன்று செயலாற்றி வரும் கண்காணிப்புக் குழுவினரோ அல்லது மனித உரிமை ஆணைக்குழுவினரோ இந்தப் படுகொலையோடு எம்மைச் சம்பந்தப்படுத்தியிருக்கவில்லை. படுகொலைச் சம்பவம் குறித்து அந்தச் சூழலில் நின்றிருந்தார்கள் என்று கருதப்படும் மக்கள் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்திருக்கின்றார்கள். அதிலும் இந்தப் படுகொலை குறித்து ஈ.பி.டி.பியை எவரும் சம்பந்தப் படுத்தியிருக்கவில்லை.

இது இவ்வாறிருக்க புலிகளின் ஊடக அறிக்கைகளையும் புலி சார்பு பத்தி எழுத்தாளர்களின் கருத்துகளையும் வைத்து தீவக மக்கள் மீதான படுகொலையோடு ஈ.பி.டி.பியினராகிய எம்மைச் சம்பந்தப்படுத்தியிருப்பது எந்த வகையில் நியாயமான செயலாகும்?

இன்னொரு ஆசிய நாடொன்றில் இருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான தகவல் தொடர்பாளர் கொடுத்த தவறான தகவலை வைத்து ஈ.பி.டி.பி. மீது சர்வதேச மன்னிப்புச்சபையின் தலைமைக் காரியாலயம் பழி சுமத்தியிருப்பது உண்மைக்கும் நீதிக்கும் மாறான செயலாகும். பொறுப்பான செயலுக்குரிய சர்வதேச மன்னிப்புச்சபை தவறான தகவலை வைத்து பொறுப்பற்ற முறையில் அறிக்கை வெளியிட்டிருப்பதால் பாதகமான சில விளைவுகளைத் தோற்றுவித்திருக்கின்றது.

ஒன்று... சம்பந்தப்படாதவர்களை இந்தப் படுகொலையோடு சம்பந்தப்படுத்தியிருப்பதால் உண்மையான கொலையாளிகள் தப் பித்துக்கொள்ளவும், அவர்கள் தொடர்ந்தும் இது போன்ற படுகொலைகளைப் புரியவும் வாய்ப்பளித்திருக்கின்றது.

இன்னொன்று.. சர்வதேச மன்னிப்புச் சபையின் செயற்பாடுகள் குறித்தும் இனி வெளிவரும் அறிக்கைகள் குறித்தும் உண்மையைப் புரிந்துகொண்ட மக்கள் நம்பகத்தன்மையை இழக்கவே வழி சமைக்கும்.

ஆகவே, உண்மைக்குப் புறம்பான வகையில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உங்கள் பிரதிநிதியின் தவறான தகவல் குறித்து நீங்கள் மீள்பரிசீலனை செய்யவேண்டும். உண்மையான கொலையாளிகளைக் கண்டுபிடிக்கச் சர்வதேச மன்னிப்புச்சபை முன்வர வேண்டும். அதற்குப் பக்கபலமாக நின்று உழைக்க ஈ.பி.டி.பி. தயாராக இருக்கின்றது.

மக்களின் கருத்துக்கும் மானிட தர்மத்திற்கும் தலைவணங்கும் ஈ.பி.டி.பி. மனித உரிமைகளுக்கு என்றும் மரியாதை செலுத்தும். நாம் அரசியல், சமூக, பொருளாதார அடிப்படையில் செயலாற்றும் கட்சி மட்டுமல்ல; மனித உரிமை மீறல்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவர உழைக்கும் மனித நேய அமைப்பும்தான் என்பதை உரக்கக் கூறிவைக்க விரும்புகின்றோம்.- என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Canon 1215, 2020, 3025, 3225, 3725, 3325, 3825 போட்டோ கொப்பி இயந்திரங்களுக் குரிய உதிரிப்பாகங்கள் (Parts Accessories) 40% கழிவு விலையில் விற்பனையாகின் றது. Stabigwards 500w, 1000w, 1500w பெற லாம். Yamaha 80 , ஒரு ஆள் பாவனையி லுள்ள 156 – மோட்டார் சைக்கிளும் விற் பனைக்குண்டு. தொலைபேசி - 011- 2981830 (சி-49702)

தொலைபேசி நிலையத்திற்கு தேவை யான அனைத்துப் பொருள்களும், இரண்டு தொலைபேசி இணைப்புக்களும், போட்டோ பிரதி இயந்திரம், பக்ஸ் இயந்திரம், கவரி டும் இயந்திரம், கொம்பியூட்டர், பிரின்டர் மற்றும் CBZ மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.06, கொண்டடி வீதி, குருநகர் யாழ்ப்பாணம். T.P.No. 222 2298, 0776917030 (50289)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கொழும்பு வெள்ளவத்தையில் இருந்து கொண்டுவரப்பட்ட அதிஉயர் இன 45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட தடுப்பூசிகள் போடப்பட்ட பொமனேரியன் ஜேர்மன் செப்பேட், டோமர் செப்பேட், டோபர்மன், கொக்கஸ் பெயினர் நாய்க்குட்டிகள் புத் தகத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 52, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். T.P. 021 222 7535. (50325)

நல்ல இன அல்ஷேசன் பெண்நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.நித்தி யானந்தன், இணுவில் மேற்கு, பரராஜ சேகரப் பிள்ளையார் கோயிலடி, இணுவில். (50349)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (சி-49296)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப் பட்ட No.1 Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 22.05.2006 திங்கட் கிழமையிலிருந்து விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளை களிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆவடி உடுவில், ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி, முருகன் -சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49297)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடனும் வீடொன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0776087896 (49962)

யாழ்.நகரில் எல்லா வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: கோபி, 785, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 9615, 222 2696 (49962)

சுண்டுக்குளியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: T.P. 222 8154 (50255)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், மணமகன் 37 வயது, இங்கிலாந்து ஆங்கிலேய நிறுவனத் தில் தகுந்த கல்வியுடன் உதவி முகாமையாளர். சகோதரி 40 வயது, அழகானவர் இளமைத் தோற்றம், மிகச் சிறந்த சீதன முடையவர், இவர்களுக்கு மணமக்கள் தேவை. மாற்றுச் சம்பந்தத்திற்கும் விருப்பமுண்டு. தொடர்பு: விளம்பர இல. 2870, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (50332)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1964 பூராட நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற O/L படித்த லண்டனில் வேலை செய்யும் மண மகனுக்கு லண்டன், பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தேவை. தொடர்பு: விளம் பர இல. 2865, மே/பா உதயன். (50295)

யாழ். இந்து கௌரவ குடும்பம, 1975 ஆம் ஆண்டு ,ஆயிலியம், 1இல் செவ்வாய், கிரகபாவம் 21 ½, உயரம் 5'10" ஜேர்மனி பிரஜாவுரிமையுடைய மணமகனுக்கு அழ கான மணப்பெண்ணைப் பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 2866, மே/பா உதயன். (49985)

## திருமண சேவை

தங்கள் மகனினதோ, மகளினதோ திரு மணம் இலகுவாகவும் துரிதமாகவும் நடத் திட வேண்டுமா? வேல் அமுதனின் ஆலோ சனையகத்தில் கடிதமொன்றைச் சுணக்க மின்றி திறந்திடுக! தங்களின் கடிதக் கோப் பினுள் சம்பந்தப்படுபவரின் சாதகக் குறிப் பும், கல்விச் சான்றிதழ்ப் பிரதிகளும் புகைப் படப் பிரதிகளும் இணைக்க வேண்டும்!! மேலதிக விவரங்களுக்கு தசாப்த விழாக் கண்ட - "சுயதெரிவு முறை முன்னோடி – திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேலமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி நாள்களில் மணி 4.30 க்கு மேல் தொடர்பு கொள்க!!! தொலைபேசி 2360488, 4514396, 0602158067. (சி-49317)

## உடற்பயிற்சி போட்டி

யாழ். கல்வி வலயப் பாடசாலை களுக்கிடையிலான உடற்கல்விப் போட் டிகள் நாளை மறு தினம் செவ்வாய்க் கிழமை பி.ப 2.30 மணிக்கு கோண்டா வில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மைதானத்தில் நடை பெறவுள்ளன.

தெரிவுசெய்யப் பட்ட அணிகளை அன்றைய தினம் போட்டிக்கு வருகை தருமாறு வலய உடற் கல்வி கல்விப் பணிப் பாளர் க. குமாரசாமி கேட் டுள்ளார்.

## Luxury House for Rent/Lease

A large 2 storeyed house (4000sqft) recently refurbished in Nallur area available for rent. (partially furnished)
Fully tiled / Terrazzo, 9 rooms, (7 with attached toilets with bath tubs)
2 Large Halls, Balcony, illuminated with Modern electrical fittings. 3 phase electricity with provision for Generator.
Solar hot water installation.
Provision for cable TV, Telephone lines in each room.
Ample parking area with garage, servant toilets.

**Viewing by appointment:**
**0777734748, 0r Mr.Ram on 2229727** (50360)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 09 ★ 03 ★ 1921



விண்ணில் 21 ★ 04 ★ 2006

### அமரர் விநாசி கணபதிப்பிள்ளை

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
எங்கள் வாழ்நாள் இருக்கும் வரை
உங்கள் நினைவு எங்களுடன் இருக்கும்.

எமது குடும்பத்தலைவரின் பிரிவுச் செய்திகேட்டு வெளிநாட்டி லிருந்தும், உள்நாட்டிலிருந்தும், நேரிலும், தொலைபேசியிலும் அனு தாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட் டவர்கள், மலர் வளையம் வைத்தவர்கள், இறுதி யாத்திரையில் பங்கு பற்றியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் பேருதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகள். அத்துடன் இன்று (21-05-2006) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

'வேளிர்வாசம்' சிங்கைநகர் புலோலி தெற்கு, புலோலி. 226 3818
லயன் வி.ஜ.தங்கவேல் ஜே.பி. ஜ.சிவபாதம், குடும்பத்தினர்.
(சி/49337)(26.21.11.17)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 21 - 09 - 1984



மறைவு 31 - 05 - 2005

### கந்தசாமி காண்டீபன் (ராசா)

திதி:வளர்பிறை நவமி 21.05.2006

மெழுகுதிரி போல் உமை உருக்கி எமக்கு வெளிச்சம் தந்தவரே பாரினில் உமக்கென்று யாருமில்லை என்றோ ஒரு வார்த்தை தனும் கூறாது
விலையற்ற பாசத்தினை தந்துவிட்டு பாதியிலே பரிதவிக்கவிட்டு சென்றீரோ?
நீ பழகிய பசுமையான நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும் அகலாதடா!
ஆண்டுகள் ஒன்றல்ல பல கோடிகள் சென்றாலும் நாம் உன்னை மறவோமடா
உன் அழகிய திருமுகம் நான் எம்மைவிட்டு அகலுமா?
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் நினைவில்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்
பழைய முகவரி: தனங்கிளப்பு, சாவகச்சேரி.
தற்காலிக முகவரி: [illegible]
(32-21.11.17)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் உங்களிடம் வேலைத்தள அடையாள அட்டை

JOP CARD

இருப்பது அவசியம். அதுவும் பிளாஸ்ரிக்கில் இருப்பின் நம்பகத் தன்மையுடையதாக இருக்குமல்லவா? இப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே உங்களுக்குள்

**NO:1 PLASTIC IC**
**முதல்தர பிளாஸ்ரிக் அடையாள அட்டை**

மேலதிக விவரங்களுக்கு: 021 222 9607, 0777 110610.
எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ், 212, கோயில் வீதி, நல்லூர். (சி.49318) (39.17.11.21)

## ஞானம்ஸ் கல்வி நிலையம், பண்டத்தரிப்பு

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

2005ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (சா/த)இல் எமது கல்வி நிறுவனத்தில் கல்வி பயின்று பரீட்சை எழுதிய 29 மாணவர்களில் 24 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் கு.சொரூபிகா 10 பாடங்களிலும் அதிவிசேட சித்தி (10A) பெற்றுள்ளார். இவரையும் ஏனைய சித்திபெற்ற மாணவர்களான

| | |
|---|---|
| கு.சொரூபிகா | 10A |
| பகீரதி | 8A, B, C |
| யூட் பிரதீபன் | 6A, 2B, C, S |
| ஞானதயாளன் | 5A, 4B, C |
| யே.தர்சிகா | 4A, 3B, 3C |
| றெஜ்சி | 4A, 3B, 3C |
| சுபாஸ்கரன் | 3A, 4B, 2C, S |

மற்றும் டிலான் றோயன், மிஸ்மன், யாழினி, தனுஜன், தர்சிகா, யசோன், இன்பராஜ், துவாரகன், அருண், லின்டவசந்தினி, சாரதா, யுவசிந்துஜா, S.பிரதீபன், சந்திரபோஸ், சிறிராம்நாத், அன்ரலா, தனுசியா, தர்சினி ஆகியோரை மேலும் கல்வியில் உயரவேண்டுமென்று எமது நிறுவனம் வாழ்த்துகின்றது.

ஞானம்ஸ் கல்விச் சமூகம், பண்டத்தரிப்பு
(50333)(32.21.11.17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. இல் க.பொ.த (சா.த) - 2005 இல் தோற்றி சிறந்த பெறுபேறுபெற்ற மாணவர்களான

| | | | | |
|---|---|---|---|---|
| 1. லோ.துஷாந்தி | 5A | 3B | 2C | |
| 2. தி.அர்ச்சனா | 3A | 2B | 4C | S |
| 3. ப.கீதப்பிரியன் | 2A | 3B | 2C | 3S |
| 4. அ.சுபேசன் | 2A | 3B | 3C | S |
| 5. வி.அனித்தா | 2A | B | 3C | 2S |

ஆகியோரைப் பாராட்டுவதுடன் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 85% மாணவர்கள் க.பொ.த (உ.த)இல் கல்வி கற்பதற்கான பெறுபேற்றைப் பெற்றுள்ளார்கள். இம் மாணவர்களை வழிப்படுத்திக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(50298) (21.11.17)
பழைய மாணவர் சங்கம்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. கோண்டாவில்.

## 31 ஆவது நினைவில்

### சுந்தரம் மேரி

நிஜமாக 1922-10-08
நினைவாக 2006-04-21



நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தை காத்துக் கொண்டேன்.

தகவல்: சீலன், ஜெனித்தா (பேரப்பிள்ளைகள்)
மானிப்பாய் வீதி, உடுவில். (50351) (21.11.17)

## மூன்றாம் ஆண்டு நினைவில்

மலர்வு 02 – 04 – 1966



உதிர்வு 24 – 05 – 2003

கலாவித்தகர்

### திருமதி மேகலா வசந்தகுமார்

B.A.(Hons) Dip.in.Edu.
(ஆசிரியை யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

திதி: நவமி (21.05.2006)

ஆனதோ மூன்றாண்டுகள்
அகலவில்லை உன் நினைவுகள்
அன்புக் கணவரும் பிஞ்சுக்குழந்தைகளும்
கெஞ்சும் குரல் கேட்கவில்லையா?
உன் ஈஸ்வர நிழலில் இளைப்பாறும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர் ஆசை மக்கள், பாசமிகு குடும்பத்தினர்.
61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.
(50358)(21.11.17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அதிகவிலைக்கு உரம் விற்கப்பட்டால் விவசாய அமைச்சு நடவடிக்கை எடுக்கும்

ஒரு பொதி உரத்தினை 350 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யும் வர்த்தகர் குறித்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாறு உரத்தினை அதிகவிலையில் விற்கும் வர்த்தகர் தொடர்பான தகவல்களை அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் வழங்க முடியும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இவ்வாறான தகவல்களை 0112947760, 0112947762, 0112885402, 0112869696 ஆகிய தொலைபேசி எண்களுடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


### உடுவில் மகளிர் கல்லூரி
### அறிவித்தல்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11இல் கல்வி கற்கும் மாணவர்கள் கவனத்திற்கு:

மேற்படி வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் 23.05.2006 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் ஒன்றுகூடவும்.

அதிபர்.

(சி/49341)(32-17)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் சக உத்தியோகத்தருமாகிய திருமதி ஜெயக்குமார் அன்றநற் சகிலா அவர்களின் தந்தை

**அமரர் பொ.டேவிற்ராஜசிங்கம் (தம்பிராசா)**

அவர்களின் ஆன்மசாந்தி திருப்பலியில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனை இறைஞ்சுவோமாக.

சுகாதாரப்பகுதி நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும் யா.மா.சபை.

(சி/46574)(32-17)

### உயர்பட்டப் படிப்புகள் பீடம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த உயர்பட்டப் படிப்புகள் பீடத்தினது கற்கைநெறிகள் யாவும் (வவுனியா வளாகம் உட்பட) எதிர்வரும் 27.05.2006 (சனிக்கிழமை) தொடக்கம் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

குறிப்பு: நூலக தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் கற்கைநெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் எதிர்வரும் 24.05.2006 காலை 9.30 மணிக்கு கற்கைநெறி இணைப்பாளரைச் சந்திக்கும் வண்ணம் கேட்கப்படுகின்றார்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/49340)(32-16)

### கேள்வி கோரல்

யாழ்.அரசினர் பொது வைத்தியசாலையில் (தேநீர்ச்சாலை) நலன்புரிச் சங்க உணவகம் நடத்துவதற்கான கேள்வி விண்ணப்பம் 2006 - 2007

யாழ்.அரசினர் பொது வைத்தியசாலை தேநீர்ச்சாலை ஒன்றினை 15.06.2006 முதல் 31.05.2007 வரை நடத்துவதற்கு தகுதிவாய்ந்த அனைவரிடமும் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் நலன்புரிச் சங்கத்தால் 31.05.2006 வரை வழங்கப்படும். கேள்விப்பத்திரம் ஒன்றிற்காக ரூபா 500 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் யாவும் 05.06.2006 முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படலாம்.

05.06.2006 முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம். மேலதிக விவரங்களுக்கு வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
வைத்தியசாலை நலன்புரிச்சங்கம்,
யாழ்ப்பாணம்.

(சி/49346)

### அறிவித்தல்

"வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை" "தெங்கன் தோட்டம்" எனும் நிலப்பரப்பு 8 குளி 5 கொண்ட ஆதனத்திற்கு செல்வி ஜெயமதி இராசரத்தினமும் செல்வி கோமதி இராசரெத்தினமும் சட்டரீதியான உறுதிகள் மூலம் சொந்தக்காரர் ஆவோம். குறித்த ஆதனத்தை எமது உறவினர் ஆட்சியென விற்க முற்படுகின்றனர். குறித்த ஆதனத்தை சட்ட ரீதியான உறுதியுள்ள எம்மைத் தவிர பிறிதொருவரிடம் கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் அங்ஙனம் கொள்வனவு செய்யின் அதனால் ஏற்படும் இடையூறு உடைமை சம்பந்தமான பிரச்சினைக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லவெனவும் இவ் அறிவித்தல் தரப்படுகின்றது. குறித்த ஆதனம் நாச்சிமார் வீதி, நவாலி வடக்கில் அமைந்துள்ளது.

*'சுஸ்வரி வாசா'*
*நாச்சிமார் வீதி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய்.*

தகவல்:
செல்வி ஜெயமதி இராசரத்தினம்,
செல்வி கோமதி இராசரத்தினம்.

(50363)(26.32.16)

### நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜிட்ஸ்சனின்

**கிங் - கொங் King Kong**

தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30

### ராஜா யாழ்ப்பாணம்

விஜய், திரிஷா நடித்த

**திருப்பாச்சி**

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

### ஒத்துமாறல்

யாழ்.மருத்துவ பீட மாணவர் கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு:
021 222 6905, 065 222 2080

### வேலையாள்கள் தேவை

கணக்காளர்
சப்பிளேயஸ்
ரீ.மேக்கர்
பார்சல் கட்டுபவர்

திறி ஸ்ரார் ஹோட்டல்,
இல.162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/49339)(32-16)

### தவறிவிட்டது

ஆவரங்கால் சிவன் கோயிலடியைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவசிதம்பரம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.670642380V) மற்றும் விசேட அடையாள அட்டை என்பன 14-05-2006 ஞாயிற்றுக்கிழமை புத்தூர் சந்தைக்கும் கூட்டுறவு உணவகத்திற்கும் இடையே கைதவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சிவசக்தி மணி மண்டபம்
அல்லது உபதபால்கந்தோர்
ஆவரங்கால், புத்தூர்.


## பிரான்பற்று ஆலயத்தில் நேற்று வேள்வி

வலி.தென்மேற்கு,மே21

பிரான்பற்று புளியடி காட்டம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற வருடாந்த வேள்வியில் சுமார் 300 ஆட்டுக் கடாக்களும் 450 கோழிகளும் பலியிடப்பட்டன.

விசேட பூசை, ஆராதனைகளுடன் நடைபெற்ற இந்த வேள்வியின்போது பலியிடப்பட்ட ஆட்டுக்கடாக்களில் ஒன்று 45ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்டது. (135)

## சுன்னாகம் சிவன் ஆலய மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,மே21

சுன்னாகம் மயிலணி விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலய (மயிலணி சிவன் ஆலயம்) ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 5.50 மணிக்கும் 6.49 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிமுதல் 31ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.


### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் க.சிவத்திரன்
அவர்களின் அன்புத் தந்தை

**தம்பிமுத்து கனகலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவர்களுடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(50357)(32-16) யா/இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்.

### கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன இரசாயனவியல் ஆசிரியர்
**க.சிவத்திரன்**
அவர்களின் அன்புத் தந்தை

**தம்பிமுத்து கனகலிங்கம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

NEW SCIENCE HALL,
KANNATHIDDY ROAD,
JAFFNA. (50366)(32-17)

இயக்குநர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள்.

### 200 பேருக்கு இலவச கம்ப்யூட்டர் ஹாட்வெயார் பயிற்சி
Diploma in Hardware Engineering

இலவசம்
Hardware Tool Box
Software CD
Font CD
Clipart CD

Duration : 10 நாட்கள் மட்டுமே
Course Fee: 4000 செலுத்தத் தேவையில்லை
பதிவுக்கட்டணம் மட்டுமே அறவிடப்படும்

தரமான பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

குறைந்தளவு மாணவர்களுக்கே இடமுண்டு

பதிவுகளுக்கு முந்துங்கள்

iii ஆம் iv ஆம் புதிய பிரிவுகள்

ஆரம்பம் 24 Wed, 27 Sat/ May 9.00am

YAARL TECH SYS.
AIMST University-Malaysia

Sir Pon Ramanathan Road, Kaladdy Junction
(Near Jaffna University) - 0773 206207

### 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 22 - 06 - 1939



விண்ணில் 22 - 04 - 2006

**திருமதி சிவபாக்கியம் கந்தசாமி**

எமது குடும்பத் தலைவியின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டும் தந்தி, தொலைபேசி மூலமாக ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (22.05.2006) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திக்கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீதிமன்ற ஒழுங்கை,
மல்லாகம்.
(50372)(32-11-17)

கணவர்: சிவசம்பு கந்தசாமி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.
தகவல்: குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வடமராட்சி வதிரியைச் சேர்ந்த

**அமரர் க.பாலகிருஷ்ணராஜா**

மலர்வு 03-11-1929 உதிர்வு 02-05-2005



பண்புடனும் அன்புடன் எங்களுடன் வாழ்ந்த உங்களை மறக்கவே முடியாது.

மனைவி கமலாதேவி,
பிள்ளைகள்: நளினி - சிவயோகி,
ரவிந்திரராஜா, நடராஜா - சுபாஜினி,
சாந்திராஜா - கௌரி,
யசோதினி - சிவராசா,
பேரப்பிள்ளைகள்: லாமினிக்கா,
லக்ஸனா, விஜேயராஜ்.

வதிரி,
கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபைக்கு ரூபா 30 இலட்சம் வரை இழப்பு

யாழ்ப்பாணம்,மே21

கடந்த வாரம் இடம்பெற்ற தீவகப்படு கொலைகளின்போது வேலணை பிரதேச சபைக்கு 30 இலட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச சபை சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர் மதிப்பீடு செய்துள்ளார்.

அன்றையதினம் வேலணை வங்களாவடிச் சந்தியில் பிரதேச சகைக்குச் சொந்தமான கடைக் கட்டடங்கள் எரியூட்டப்பட்டன. அவற்றில் ஆறு கடைக்கட்டடங்களில் மூன்று கட்டடங்கள் முற்றாக எரிந்துள்ளன. இதனால் ஏற்பட்ட நஷ்டம் குறித்து பிரதேச சபை செயலாளர் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யவுள்ளார்.

இதேவேளை -

வங்களாவடிச் சந்தியில் உள்ள எரிபொருள் நிலையத்திற்கு ஏற்பட்ட சொத்திழப்புக் குறித்து மதிப்பிடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இழப்புகளின் விவரம் விரைவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(185)

# அகதிகள் படகு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படகு இரவு 10.30 மணியளவில் இந்தியக் கடற்பரப்பில் 2ஆம் திட்டு என்ற இடத்தில் பேரலை தாக்கிக் கவிழ்ந்தது. படகிலிருந்தவர்களில் 9பேர் கடற்பகுதியில் காணப்பட்ட மணற்திட்டில் நீந்தி ஏறி உயிர்தப்பினர்.

நேற்றுப் பகல் அப்பகுதியில் பறந்த இந்தியக் கடலோரக் காவற்படையினர் அவர்களைக் கண்டு மீட்டனர். இந்த விபத்தில் உயிரிழந்த கந்தசாமி நிவாசினி (வயது 21), புவனவதி (வயது 40), மோகன் நவமணி (வயது 65), கோவிந்தசாமி (வயது 75), ராதுசா (வயது 14) ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் ஐவரைத் தேடும் பணி இடம்பெறுகின்றது. இப்படகில் பயணித்தவர்கள் திருகோணமலையிலுள்ள பள்ளத்தோட்டம் மற்றும் 10ஆம் குறிச்சி ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களாவர். (12-ரி)

# ஐரோப்பிய ஒன்றியத் தலையீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பானது. வன்முறைகள் அதிகரித்தமைக்கும், அமைதி முயற்சிகள் தடைப்பட்டதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அது குற்றம் சுமத்துகிறது. அதேசமயம், அது இலங்கை அரசை மென்மையான - அனுதாபப் போக்கோடு கையாண்டு, ஜனாதிபதி ராஜபக்ஷவின் நடவடிக்கைகளை மெச்சுகின்றது. விமானக் குண்டுவீச்சுக்கள், ஆட்லறித் தாக்குதல்கள் மூலம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சொல்லொணாத் துன்ப துயரங்கள், இராணுவத்தின் உதவியோடு துணைப்படைகள் தொடராக மேற்கொண்ட கொடூரக் கொலைகள் போன்றவை சமாதான முறையில் - கவனிக்காமல் - புறமொதுக்கப்படுகின்றன'' - என்று குறை கூறினார் பாலசிங்கம்.

''தமிழர் தாயகத்தின் பயங்கமான சூழ்நிலைகளையும் கள யதார்த்தங்களையும் கவனத்தில் எடுக்கத் தவறியதன் காரணமாக ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற தீர்மானத்தின் அவதானிப்புகள் கேள்விக்கும் சந்தேகத்துக்கும் உரியனவாகிவிட்டன'' என்றும் அவர் கூறினார்.

''இந்தக் கள யதார்த்தத்தைக் கவனத்தில் கொள்ளாமல் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கததைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டால் அந்த நடவடிக்கை புலிகளைப் பேச்சு மேசைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கும் என எதிர்பார்த்து ஐரோப்பிய ஒன்றியம் இம்முயற்சியை எடுத்துள்ளது. இத்தகைய அழுத்தங்களுக்கோ, இழிவுபடுத்தல்களுக்கோ தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை தலைசாய்ந்து அடிபணியுமா என்பதில் எனக்கு ஆழமான சந்தேகமே உண்டு. ஆகவே, இந்த நகர்வு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். இந்த நடவடிக்கையினால் சர்வதேச தனிமைப்படுத்தலையும் இழிவுபடுத்தலையும் எதிர்கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் காரணமாக பேச்சுக்களில் இருந்து மேலும் விலகிப் போகவே நிர்ப்பந்திக்கப்படும்'' - என்றும் சுட்டிக்காட்டினார் பாலசிங்கம்.

''தமிழர்களுடைய ஆதங்கங்களை அனுதாபத்தோடு இதுவரை நோக்கி வந்த ஐரோப்பிய ஒன்றியம், இப்போது இந்தத் தடையை விதிக்க முற்படுவது இலங்கை அரசுக்கும் விடுதலை இயக்கமான புலிகள் அமைப்புக்கும் இடையிலான சமச்சீர் தன்மையை - சமநிலைப் பண்பை - மேலும் ஆழமாகப் பிளவுபடுத்தும். அதன் மூலம் அரசியல் தொடர்பாடல்கள், ஈடுபாடுகள் போன்றவற்றுக்கான ஆக்கபூர்வமான நிலைமையை அது மோசமாகப் பாதிக்கும். அத்தோடு, புலிகளைத் தடை செய்யும் விதத்தில் - அரசுக்கு ஆதரவான வகையில் - இத்தகைய முடிவை எடுப்பது தமிழர்களின் சட்டபூர்வமான போராட்டத்தை வெறும் பயங்கரவாதப் பிரச்சினையாகக் காட்டுவதற்கு இலங்கை அரசு மேற்கொண்டுவரும் சர்வதேசப் பிரசாரத்துக்கும் மேலும் ஊக்கமளிப்பதாக அமையும். அது, இந்தப் பிரதேசத்தில் அரசியல் தீர்வுக்கு உதவமாட்டாது.

''எனவே, ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தலையீடு இலங்கைப் பிரச்சினைக்கு நீதி யான - நிலைத்து நிற்கக் கூடிய - தீர்வு ஒன்று எட்டப்படுவதற்குப் பெரும் தடையாக வந்தி ருக்கின்றது'' - என்றார் பாலசிங்கம். (உ)

# அமெரிக்க அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம்,

ஐரோப்பிய ஒன்றியத் தடை முஸ்தீபு தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தோடு இராஜதந்திர அணுகுமுறையில் விடயங்களைக் கையாண்டு திரைமறைவுப் பேச்சுக்களை நடத்தி விடயத்தை சமாளிப்பதை விடுத்து, இவ்விவகாரம் பற்றிய செய்திகள் வெளியானதும் ஊடகங்கள் மூலம் பகிரங்கமாக ஐரோப்பிய ஒன்றியத்தையும் அதன் நடவடிக்கையின் விளைவுகளையும் கடுமையாக விமர்சித்து கருத்து வெளியிட்டதன் மூலம் புலிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றித்துக்கும் இடையில் நிரந்தரத் தெறிப்பை ஏற்படுத்திவிட்டார் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் என்ற சாரப்பட சில இணையத்தளங்களில் தமிழ் அரசியல் விமர்சகர்கள் சிலர் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இவ்விகாரம் குறித்து ஆராய்ந்த வேறு சில உள்வீட்டுத் தகவல்கள் வெளியாகின.

ஈழத் தமிழர் விவகாரம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் மூத்த இராஜதந்திரிகள் சிலர் இரு வாரங்களுக்கு முன்னர் லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை அவரது இல்லத்தில் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்தியிருக்கின்றனர். அப்போது புலிகள் தரப்பு வாதங்களை ஏற்றுக் கொண்டு இணங்கிச்சென்ற அவர்கள், இப்போது திடீர் குத்துக்கரணம் அடிக்கும் நிலைப்பாட்டை எடுத்திருப்பது புலிகளின் தலைமைக்கு பெரும் ஆச்சரியத்தையும் விசனத்தையும் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இவ்விடயத்தில் இராஜதந்திர ரீதியில் பல முயற்சிகளை எடுத்து விடயங்களைக் கையாண்டு பார்த்த பின்னரே புலிகள் ஐரோப்பிய ஒன்றியத் தடையால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளைப் பகிரங்கமாக சுட்டிக் காட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)

# அல்லைப்பிட்டி மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ந.ரவிராஜ், வேலணை மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர்களுடன் நேற்றுக்காலை அல்லைப்பிட்டி சென்று மக்களுடன் கலந்துரையாடினார். பின்னர் அல்லைப்பிட்டிச் சந்தியில் உள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரியைச் சந்தித்து பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் செல்ல அனுமதிக்குமாறு கோரினார். இதற்குச் சம்மதம் தெரிவித்த கடற்படை அதிகாரி இடம்பெயர்வோர் விவரங்களைப் பதிவுசெய்துவிட்டுச் செல்லும்படி அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து நேற்று முற்பகல் 10.30 மணியளவில், கிடைத்த வாகனங்களில் தளபாடங்கள், வீட்டு உபகரணங்கள் மற்றும் படகுகள், கால்நடைகள் போன்ற வாழ்வாதாரங்கள் ஆகியவற்றை ஏற்றி மக்கள் தீவகத்தைவிட்டு வெளியேறிப் புறப்பட்டனர்.

அல்லைப்பிட்டி முகாம் முன்பாக வைத்து கடற்படையினர் இடம்பெயரும் குடும்பங்களின் விவரங்களைப் பதிவுசெய்துவிட்டு மேற்கொண்டுசெல்ல அனுமதித்தனர்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், உலக தரிசனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தீவகத்தில் நேற்று பிரசன்னமாகியிருந்து இடம்பெயர்வோரின் நலன்களைக் கவனித்தனர்.

ரவிராஜ் எம்.பியும், அல்லைப்பிட்டி பங்குத்தந்தையும் விடுத்த வேண்டுகோளை ஏற்று மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் இடம்பெயர்வோருக்கு போக்குவரத்து வசதியை ஏற்பாடு செய்தது.

அல்லைப்பிட்டியிலிருந்து சுமார் 10 குடும்பங்கள் தவிர்ந்த அனைவரும் வெளியேறினர் என்றும் -

மண்கும்பானிலிருந்து சில குடும்பங்கள் இடம்பெயர்ந்தன என்றும் -

மண்டைதீவு மக்களும் வெளியேறுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் -

தீவகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், இடம்பெயர்ந்த குடும்பங்களில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் நேற்று வன்னிக்குச் சென்றனர். அவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பில் நேற்றிரவு கிளிநொச்சியில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். வன்னி செல்லவிருந்த மேலும் ஒரு தொகுதி மக்கள் நேரம் கடந்த காரணத்தால் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று கூறப்படுகின்றனது. அவர்கள் உட்பட இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஓ.எல்.ஆர். தேவாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவு வசதியை யாழ். செயலகம் வழங்கியது.

SKY COMPUTERS (PVT) LTD.
Affiliated with Irish International University (U.K)
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
MS Office - 2 Months
MS-Word - 1 Month
MS-Excel - 1 Month
MS-Access - 1 Month
MS-Power Point - 1 Month
MS- Office 2000/=
INTER NET E-MAIL 1000/=
Desk Top Publishing - 2 Months
Adobe Photoshop - 1 Month
Adobe PageMaker - 1 Month
CorelDRAW - 1 Month
Computerized Accounting and HARD WARE Technology - 3 Months
KIDS PROGRAM சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
அனைத்துப் பாடத்திட்டத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன எனவே உங்கள் பொன்னான காலத்தை பிரயோசனப்படுத்திக்கொள்ள உடன் விரையுங்கள்
E-mail : skycom@WOW.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead
இலகுவான கட்டணமுறை.

CASSETTE - VCD
290/= per hour
(Excluded CD)
STR
81, Palaly Road, Kantharmadam.
077 3564242

பிரத்தியேக வகுப்புகள்
A/L - 2008, 2007
பொருளியல்
P. சண்
2007- பகுதி - II
ஆரம்பம் 22.05.2006 4 P.M
திகழ் கல்விநிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.

NEW SCIENCE COLLEGE
விடுமுறை வகுப்பு
சடமும் கதிர்ப்பும்
MON, FRI 1.30- 2.30
ஆரம்பம்: 23.05.2006
விடுமுறைக்குள் இவ்வலகு பூர்த்தியாக்கப்படும்.
புலங்கள்:
பிரிவு I: MON, WED 2.30- 3.30
பிரிவு II: SAT, SUN 2.30- 3.30
ஆரம்பம்: 20.05.2006
By: கருணாநிதி

324, Palaly Road, Jaffna.
Special Workshop in School Vacation
பாடசாலை மாணவர்களுக்கானது
கணினி, கணினியும் சதுரங்கமும், பொதுவிவேகம்
*****Supported by UNDP/JRRP*****

CATWAS.COM
COMPUTER ACADEMY
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805
விடுமுறை கால மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA COURSES
Ms Office 1750/=
DTP 2000/=
Hard Ware 1800/=
இம் மாணவர்களுக்கான பிரிவு 22.05.2006-15.06.2006 வரையான காலப்பகுதியில் முடிவடையும்
முழுமையான பாடப்பரப்பு கவனத்தில் கொள்ளப்படும்
CERTIFICATE COURSES
Word XP, Page Maker 7.0
Access XP, Photo Shop 7.0
Excel XP, Corel Draw 11.0
Power Point XP, HTML
Kids Program
ஏனையவர்களுக்கான பிரிவுகள் ஆரம்பம்

வெளிவந்துவிட்டது
GITSERIES 1, க.பொ.த.உயர்தர பொதுத்தகவல் தொழில் நுட்பத்திற்குரியது. (GIT)
கிடைக்குமிடங்கள்:- MICIT College பொற்பதி வீதி, கொக்குவில், பூபாலசிங்கம் புத்தகசாலை, ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ், சிறிசுப்ரமணியம் புத்தகசாலை, சிறிலங்கா புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகக்கடைகள்.
ஆசிரியர் நா.அம்பிகைபாகன்.

நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
பிரிவு- 03
O/L DAY CLASS
ஆரம்பம்: 22-05-2006 8.30-2.30
தரம் 6 தொடக்கம் O/L (EVENING CLASS)
காலை 9.30-2.00 மணிவரை
(விடுமுறை நாள்களில் சகல பாடங்களும் நடைபெறும்)
22-05-2006 காலை 9.30-2.00
இவ்வருடம் O/L DAY CLASS பிரிவு 6 மட்டுமே.
பிரிவு 4 மிக விரைவில்.
(ச-49342)

விசேட சலுகை
8500/-
எப்பிரதேசத்திலும் வீட்டில் இருந்தவாறு உரையாடக் கூடிய முறையில் டயலொக், மொபிரெல் மேசைத்தொலைபேசிகள் பைக்கேச் இணைப்புக்களுடன் குறைந்த செலவில் பொருத்தித் தரப்படும்.
மொபிரெல் 800/-, டயலொக் 500/- பைக்கேச்சுகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
உத்தரவாதம் உண்டு
அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகள், அதற்கான உதிரிப்பாகங்கள் விற்பனையும், பழுது பார்த்தலும்.
சகல விதமான கையடக்கத் தொலைபேசிகளும் Un Lock செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
நியூ பவர் செலுலர் டிரேடிங் கம்பனி, 205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773- 518330, 077- 6660289.
(50220) (39)

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org